# மண்

இதழ் 190

ஜேர்மனி / 2018

ஆடி - ஆவணி

July - August



வித்தியா, சேயா வரிசையில் இன்று...

செல்வி. றெஜீனா சிவனேஸ்வரன்


6வயது அகாலமரணம் 25.06.2018

சுழிபுரம் - யாழ்ப்பாணம்

தமிழர்களால் படுகொலை செய்யப்படும்

தமிழ்ச் சிறுமிகள் வரிசையில்.





யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர் திருமதி கீதா
பரமானந்தன் அவர்களின் இரு நூல்களின் வெளியீட்டு விழா
யேர்மனி - 10.06.2018





இவ்வாறு யாழ்குடாவில் வன்முறைத் தாக்குதல்கள் ஆங்காங்கே தொடர்ந்து கொண்டிருக்கையில், போதைப் பொருள் கடத்தலின் இடைத்தளமாக யாழ்குடாநாடு மாறியுள்ளதாக மற்றொரு அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது. இவ்வாறான சமூகவிரோதச் செயற்பாடுகளின் முக்கிய தளமாக யாழ்குடாநாடு மாற்றமடைந்திருப்பது பெரும் கவலை தருகின்றது. இலங்கையின் கல்விக் கோட்டையாகவும், பெரும்பெரும் புத்திஜீவிகள் உதித்த மண்ணாகவும், தமிழர் கலாசாரத்தின் விளைநிலமாகவும், உழைப்பாளிகளுக்குரிய முன்மாதிரி பூமியாகவும் திகழ்ந்த யாழ். மண்ணில் இன்று அரங்கேறுகின்ற கொடுமைகள் அச்சமூட்டுகின்றன.

யாழ்குடாநாடு முன்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது சம்பவித்திருக்காத கொடுமைகள், இன்று பொலிஸ ாரின் கட்டுப்பாட்டில் உள்ள போது இடம்பெறுவதாக அங்குள்ள மக்கள் அபிப்பிராயப்படுவதையும் அறிய முடிகிறது. அதேநேரம், தென்னிலங்கையிலிருந்து தண்டனை இடமாற்றம் பெறுகின்ற பொலிஸ ாரில் பலர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. மனக்கிலேசத்துக்கு உள்ளாகியுள்ள அவர்களது கடமைப் பொறுப்பில் மக்கள் சந்தேகப்படவும் வேண்டியுள்ளது.

இவற்றைவிட புலம்பெயர்ந்து வாழும் மக்கள் தமது உறவுகள் நட்புக்களுக்குச் செய்யும் உதவிப்பணம்கூட இப்படித் தவறான வழிகளில் பயன்படுத்தப்படுவதையும் நாம் இங்கு அவதானிக்க வேண்டும். எனவே நாம் தாயகத்துக்கு அனுப்பும் உதவிகள் சரியான வழியில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும் என தாயக புத்திஜீவிகள் வருத்தம் தெரிவித்திருப்பதையும் நோக்க வேண்டும்.

யுத்தம் முடிவுற்று ஒன்பது வருடங்கள் கடந்து போன நிலையில் மக்கள் இன்னும் தான் நிம்மதிக் காற்றைச் சுவாசிக்க முடியாதிருக்கிறது என்பது வேதனையையே தருகின்றது. நில அபகரிப்பு, பாலியல் கொலைகள், சிறுமிகள் கொலை, கொள்ளை, வழிப்பறி, கடத்தல், போதைவஸ்த்துப்பாவனையால் ஏற்படும் கொடுமைகள் எனப் பட்டியல் நீண்டு வளர்ந்து கொண்டிருப்பதற்கு நம்மவர்கள்தான் முதல் காரணமாகும். அதாவது நம்மவர்களால்தான் நம்மவர்கள் கொன்றொழிக்கப்படும் அவலம் வேறு இன மக்களில் நடைபெறுகின்றதா?.. என்பதை நாம் எல்லோரும் சிந்தித்துக் கருமமாற்றும் வேளை இதுதான். இல்லையேல் நமது இனம் அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும்!.......

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்!...




## நைவினை நணுகேல்....

ஒருவரோடு ஒருவர் பகைகொண்டிருக்கிறார்கள். மூர்க்கமான பகை. இத்தகைய பகமையை ஒரு நாட்டின் அரசர்கள்தான் மேற்கொள்ளுவர். அதனால் பெரும் போர் மூளும். பலர் உயிரிழக்க நேரிடும். ஆனால் சாதாரண மக்கள் கடும்பகை கொண்டால் என்ன ஆகும்?..அப்போதும் அழிவே ஏற்படும். ஒருவர் மற்றொருவரை எவ்வகையிலாவது அழிக்க, கொல்ல நினைப்பார்கள். நேருக்குநேர் போரிட்டோ, மல்யுத்தம் செய்தோ தன் விரோதியை அழிக்கமுடியாத நிலையில், பில்லி சூனியம் போன்ற வேறு கொடுரமான முறையில் அவரைக் கொல்ல முயற்சிப்பார்கள். அது பகைவர்களுக்குக் கேடு விளைவிப்பதோடு, அதை ஏவிவிட்டவரையே அழிக்கும். ஆகவே இது போன்ற கொடிய காரியங்களைச் செய்ய நீங்கள் நினைக்கவே கூடாது. நைவினை என்றால் - பிறர் கெடுவதற்கான செயல்கள்.

## நொய்ய உரையேல்...

சொல்லும் செயலும் பயனுடையதாக இருக்க வேண்டும். தானியமணி இல்லாத நெல்லை யார் விரும்புவார்கள். அதனால் யாருக்கு என்ன பயன்?.. பதர்களைப் போலவே பயனில்லாத பேச்சுக்களைச் சிலர் பேசுவார்கள். இவர் பேச்சினால் பிறருக்குப் பயனேதும் இருக்காது. பயன்தரும் வார்த்தைகளையே கூறவேண்டும். பயனற்ற வீண் சொற்களைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்காமல் வீண் சொற்களைக் கூறினால் உங்களை "வீணர்கள்" என்றும் பிறர் இகழ்வார்கள். யாரும் மதிக்கமாட்டார்கள். அலட்சியப்படுத்துவார்கள். இந்த அவமதிப்பினால் பிறரிடமிருந்து நீங்கள் ஒதுக்கப்படுவதனால் உங்கள் வாழ்க்கை பாழாகும். ஆகவே ஔவை கூறுகிறார் "நொய்ய உரையேல்" என்று. நொய்ய என்றால் அற்பமான சொற்கள் என்று பொருள்படும்.

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

**79.மொழிவது மறுக்கின் அழிவது கருமம்...**
மொழிவது அதாவது பெரியோர் சொல்வதை மறுக்கின், கேளாமல் நடந்தால் அழிவது கருமம். அந்தக்காரியம் பயனின்றிப் போகும்.

**80.மோனம் என்பது ஞான வரம்பு...**
மோனம் என்பது மௌன நிலையாகும். ஞான வரம்பு என்றால் மெய்ஞானத்தின் எல்லை. மௌனமே ஞானத்தின் எல்லையாகும்.

**81.வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்து உண்...**
செல்வத்தில் நீ சோழ மன்னனுக்கு ஒப்பாக இருப்பினும் அளவு அறிந்து அதாவது வருமானத்தின் அளவு அறிந்து அதற்குத்தக்கபடி செலவு செய்து கொடுத்து உண்பாயாக.

**82.வானம் சுருங்கின் தானம் சுருங்கும்...**
வானத்தில் மழை குறையுமானம் கொடை செய்வதும் குறைந்துவிடும். அதாவது மழை வளம் குறைந்தால் கொடை செய்வதும் குறைந்துவிடும்.

**83.விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்...**
விருந்தினரை உபசரித்து உண்பிக்கும் பண்பு இல்லாதவர்க்கு. அதாவது விருந்தினரை உபசரியாதவரிடம் இல்லறத்திற்குப் பொருந்திய நல்லொழக்கம் இல்லை (இல்லறம் இருந்தும் இல்லையாம்)

**84.வீரன் கேண்மை கூர் அம்பாகும்...**
வீரனுடைய சிநேகம் கூர் அம்புபோன்றது. அதாவது வீரனுடைய நட்பு கையிலே கூர்மையான அம்பு இருப்பது போன்றது.

**85.உரவோர் என்கை இரவாது இருத்தல்...**
உரவோர் என்கை - வல்லவர் என்றால் இரவாது இருத்தல். அவன் எவரிடத்தும் யாசிக்காமல் இருப்பவரே. வல்லவர் என்பவர் எவரிடமும் யாசியாது இருப்பவரே.

# குட்டிக்கதை

அனைவருக்கும் பொருந்தும்.

ஒருநாள் காரியாலயத்தில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று பார்க்க சென்றனர். அதில் "உங்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார், அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்" என்று எழுதி இருந்தது. நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டிடத்திற்கு சென்றனர்.

சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும். நல்ல வேளை அவன் இறந்துவிட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கி சென்றனர். சவப்பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது.அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது.சவப்பெட்டியுள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது "உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம், நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது" ,உங்கள் வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" என்றிருந்தது. உங்கள் வாழ்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது, உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது. நீ நினைத்தால் மட்டுமே உன் வாழ்வை மாற்ற முடியும். வாழ்க வளமுடன்!....

---

பொன்மொழி:-

நாலே நாள் பழகினாலும் நல்லவன் நல்லதையே செய்வான். நாற்பது வருடங்கள் பழகினாலும் கெட்டவன் கெட்டதையே செய்வான்.

# கற்றவர்கள்.....

கரும்பலகையில் '1000' என்று எழுதிவிட்டு, தன் வகுப்பறையில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து அவனது கணித ஆசிரியர், 'இது எவ்வளவு?' என்று கேட்டார். நம்பிக்கையுடன் இருந்தாலும், கேள்வியின் எளிமையைக் கண்டு சற்று அவமானமாக உணர்ந்து, 'ஓராயிரம்,' என்று அவன் பதிலளித்தான். இப்போது ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்யத்தை அந்த எண்ணின் வலப்பக்கம் '10000' என எழுதிவிட்டு, அது எவ்வளவு என்று அவனிடம் மீண்டும் கேட்டார். 'பத்தாயிரம்,' என்று உடனடியாகப் பதில் வந்தது. இப்போது இன்னொரு பூஜ்யத்தை அந்த எண்ணின் இடப்பக்கம் '010000' என்று எழுதிவிட்டு, அது எவ்வளவு என்று கேட்டார். 'அதே பத்தாயிரம்' என்று அவன் பதில் கூறினான்.

ஆசிரியர் அவனைப் பார்த்து கண் சிமிட்டிப் புன்னகைத்தவாறே, 'ஒரு முக்கியத்துவமற்ற எண் ஒரு முக்கியம் வாய்ந்த எண்ணைப் பின்தொடர்ந்து செல்லும்போது, அதன் மதிப்பு கூடுகிறது. அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணிற்கு முன்னால் செல்ல முயற்சிக்கும்போது, அதற்கு மதிப்பேதும் இல்லை. அது போன்றதுதான் ஆசிரியருக்கும், மாணவனுக்கும் இடையே உள்ள உறவும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின்தொடர்ந்து சென்றால், அவனது மதிப்பு கூடுகிறது. அதுவே தலைகீழாக அமைந்தால்., பதில் உனக்கே தெரியும் என்று முடித்தார்.... முக்கியத்துவத்தையும், மரியாதையையும், சகிப்புத்தன்மையையும் பின் தொடர்ந்து பாருங்கள் நண்பர்களே, மனிதனாய் பிறந்ததற்கான மகத்துவம் புரியும்... கற்றவரை பின் தொடருங்கள்... வாழ்வின் அர்த்தம் விளங்கும்.

---

### பொன்மொழிகள்:-

பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம். ஒன்றைப் பலதாக்குவது பகையின் குணம்.

உன் வசதிக்கும் வருவாய்க்கும் ஏற்ப வாழ்க்கை நடத்து. கையில் இருக்கும் துணியை அளந்துகொண்டு சட்டையை வெட்டு.

## அரை ரிக்கட்....

(செல்வி நிவேதா யதீஸ்குமார்
ரூத் மிஷன்-கிளிநொச்சி)

பஸ்வண்டி நிறுத்தத்தில் வண்டி வந்து நின்றது. அனைவரும் முண்டியடித்துக்கொண்டு ஏறினார்கள். "ரிக்கட்...ரிக்கட்" என்று ரிக்கட் கொடுத்துக்கொண்டு வந்தார் நடத்துனர். ஒருவர் சின்னப் பையனுடன் அமர்ந்திருந்தார். "கண்டிக்கு ஒரு ரிக்கட்" என்றார். "என்ன ஒரு ரிக்கட்டா" "இந்தப் பிள்ளைக்கு அரை ரிக்கட் எடுக்க வேண்டும்" என்றார் நடத்துனர். என்ன அரை ரிக்கட்டா?..."இவன் சின்னப் பையன்...இவனுக்கு ரிக்கட் தேவையில்லை" என்றவாறு அவர் அமர்ந்திருந்தார். "என்ன சின்னப் பையனா?..பெரியவன் போல இருக்கிறானே" என்றார் நடத்துனர். "இல்லை ஐயா நான்கு வயதுதான் இவனுக்கு" எனத் தன்னை நியாயப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் வாதம் நீண்டுகொண்டிருந்தது.

பயணியின் அருகே ஒரு பிரமுகர் கண்ணாடி, கோட் அணிந்திருந்தார்."ஐயா அந்த அரை ரிக்கட்டுக்கு நான் பணம் தருகிறேன் எனக் காசைக் கொடுத்தார். பயண முடிவில்பஸ்ஸிலிருந்து இறங்கிய பயணி பையனோடு அருகிலிருந்த பாடசாலைக்குள் நுழைந்தார். "வணக்கம் சேர்" வணக்கம்...வணக்கம் அமருங்கள்.... உற்றுப் பார்த்தார் பயணி. பஸ்ஸில் அரை ரிக்கட் வாங்கிக் கொடுத்த அதே பிரமுகர். "சேர் என் மகனைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும் இன்று வரும்படி கடிதம் வந்திருக்கின்றது. அதற்காக வந்துள்ளேன்" என்றார். "ஐந்து வயது பூர்த்தியடையாத பிள்ளைகளை நாங்கள் பாடசாலையில் அனுமதிப்பதில்லை" என்றார் அவர். "இல்லை சேர் இவனுக்கு ஐந்து வயது முடிந்து ஆறு மாதமாகிறது இதோ பிறப்புப் பத்திரம் என அவர்நீட்டினார். "அப்போதுஏன்பஸ்ஸில் அரை ரிக்கட்டுக்காக சச்சரவு ஏற்படுத்தினீர்கள்" என்று கேட்டார். மௌனமானார் அந்தப் பிரயாணி. "இங்க பாருங்கோ இது ஒழுக்கமான கல்லூரி, இங்கு ஒழுக்கம்தான் முக்கியம். நீங்கள் எவ்வித பத்திரங்களைக் கொடுத்தாலும் நான் நம்பப் போவதில்லை. சிறிய தொகைக்காக பஸ்ஸில் எவ்வளவு சண்டை போட்டீர்கள்...."அப்படியே நான் இந்தப் பையனைப் பாடசாலையில் சேர்த்தால் இந்தக் கல்லூரிக்கு வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்" என்று கோபத்துடன் கேட்டார். மன்னிப்புக் கேட்டார் அந்தப் பயணி."எங்களுக்குக் கல்லூரியின் பெயர் முக்கியம் ஆதலால் இடம்கிடையாது நீங்கள் போகலாம் என்றதும் வெட்கத்துடன் வெளியேறினார் தந்தை. சிறுவனோ தந்தைமீது கோபப்பட்டான்.

# அரசியின் கொட்டாவி... (செல்வி மௌசிகா மகேந்திரன் ரூத் மிஷன் - கிளிநொச்சி)

திருமலாம்பாள் என்ற அம்மையார் கிருஷ்ணதேவராயர் துணைவியாவார். இந்த அம்மாள் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தார். அது அவருக்குப் பழக்கமாகிவிட்டது. ஆனால் அரசருக்கு அது பிடிக்கவில்லை. அன்றிரவு அரசர் அவளருகில் சென்றபோதும் அவள் கொட்டாவி விட்டுக்கொண்டே இருந்தாள். அப்போது அவள் முகத்தைப் பார்க்கவே மன்னருக்குப் பிடிக்கவில்லை. அன்றிலிருந்து அவளிருக்கும் பக்கம் செல்வதையே மன்னர் நிறுத்திக் கொண்டார்.அம்மையாருக்கு இது மிகுந்த வேதனையைக் கொடுத்தது. மிகவும் வருத்தத்துடன் இருந்த அம்மையாரைப் பார்த்த தென்னாலிராமன் என்ன நடந்தது என்று விசாரித்தான். நான் கொட்டாவி விடுவது பிடிக்காமல் மன்னர் எனது இருப்பிடத்திற்கு வருவதையே நிறுத்திவிட்டார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று வருந்தினாள். தென்னாலிராமன் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதாக அம்மையாருக்கு வாக்குக்கொடுத்துச் சென்றான்.

ஒருநாள் அரச அதிகாரிகள் அரசனைக் காண வந்திருந்தனர். அப்போது தென்னாலிராமனும் அரசனோடு இருந்தான். அந்த அதிகாரிகள் நாட்டில் பயிர்வளத்தை எப்படி மேம்படுத்துவது என்பதுபற்றி அரசனுடன் விவாதித்துக் கொண்டிருந்தனர். தென்னாலிராமனோ அவர்களது பேச்சினுள் புகுந்து பயிர் நன்றாக வளரவேண்டுமானால் யாரும் கொட்டாவி விடக்கூடாது என்றான். மன்னரும் மற்றவர்களும் தென்னாலிராமனை விநோதமாகப் பார்த்தனர். தென்னாலிராமனோ விடாமல்...விவசாயம் செய்பவர்கள் யாரும் வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடவேகூடாது. அப்போதுதான் பயிர் நன்றாக வளரும் என்றான். மன்னருக்குக் கோபம் வந்துவிட்டது. "ராமா இது என்ன விநோதம்" விவசாயத்திற்காக வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடாமல் இருக்க முடியுமா?..என்றார். வேறென்ன மன்னா!.. உங்களுக்கு முன்னால் கொட்டாவிவிடும்போது உங்களுக்குக் கோபம் வருவதுபோல...பயிர்கள் முன்னால் கொட்டாவிவிட்டால் பயிர்களுக்குக் கோபம் வரும்தானே..கேவலம் கொட்டாவியால் ஒருவர் வாழ்க்கை நாசம் ஆக வேண்டுமா?..என்று கூறிவிட்டு மன்னரை ஓரக்கண்ணால பார்த்தான் ராமன். மன்னனோ ராமன் சொன்னதைப் புரிந்துகொண்டு கேவலம் கொட்டாவிக்காக வாழ்க்கையை இழக்கப்பார்த்தேனே என மனம் வருந்தி மனைவியுடன் ஒன்றுசேர்ந்து ராமனுக்குப் பரிசளித்தனர்.

# கங்காரு



கங்காரு என்ற இனத்தின் தோற்றம் அவுஸ்திரேலியா நாட்டைத்தான் ஞாபகப்படுத்தும். இந்த உயிரினத்தைப் பற்றிப் பார்த்தால் இதன் குட்டிகள் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பே பிறந்துவிடுகின்றன. மீதம் வளர்ச்சி எல்லாம் கங்காருவின் தாய் வயிற்றுப் பையில்தான் நடக்கும்.

குட்டி பிறந்தவுடனே வயிறு வழியாக ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். பிரசவ காலத்தில் கங்காருக்குட்டி வெளியே வருகின்ற துளைமுதல் வயிற்றின் மேற்பகுதி வரையான பாகத்தை நக்கும். இப்படி நக்கி.. நக்கித் தன் உடல் உரோமத்தின் வழியே ஒரு பாதையை ஏற்படுத்தும் குட்டி. இப்பாதை வழியே ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். அம்மாவின் பாலைத்தவிர மற்ற உணவை செரிக்கக்கூடிய திறன் வரும்போதுதான் உட்கொள்ளும்.

இந்தத்திறன் வரும்வரை குட்டியானது அம்மாவின் பைக்குள்ளேதான் இருக்கும். குட்டியின் உடற் பகுதிகளெல்லாம் முழுமையாக வளர்ச்சியடைந்த பிறகுதான் கங்காரு தன் குட்டியை கீழே இறக்கிவிடும். பிறகு எப்போதாவது நரியோ மற்ற விலங்குகளோ பிடிக்க வரும்போது குட்டி ஓடிவந்து தன் தாயின் பைக்குள் ஏறி ஒளித்துக்கொள்ளும். இது ஒரு அதிசய விலங்காகவே கருதப்படுகின்றது.

செல்வி ஸ்ரீ சுகன்யா
நீத் மிஷன் ஜெயபுரம் – கிளிநொச்சி

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 12

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 2 | | | | 7 | |
| | | | 8 | 9 | | 2 | | |
| 3 | 5 | | | 1 | 7 | | | |
| | 4 | | | | 3 | | 1 | 2 |
| 6 | | 8 | 7 | | 2 | 3 | | 5 |
| 5 | | 3 | 1 | | | | | |
| | 6 | 9 | | 2 | | 5 | 8 | 4 |
| | 3 | 1 | 5 | 7 | | 6 | | 9 |
| 2 | 8 | | | 6 | | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 101

**(ஆடி - ஆவணி-2018)**

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 பாடசாலையில் இதுவிட்டால் மாணவர்களுக்கு ஆனந்தம்தான்.

15-16 இவை அழிவதால் உலகில் மழை குறைவடைகின்றது.

வ – இ:

10 -09 உறுப்புக்களில் ஒன்று.

13 -15 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.

கீ – மே:

08-04 வானத்தில் தெரிவது.

10 -02 துணிவகைகளில் ஒன்று.

மே – கீ:

01- 09 இது காட்டிப் பேசக்கூடாது என்பர் பெரியோர்.

03- 11 நவரத்தினங்களில் ஒன்று

08- 16 அம்மா அவித்துத்தரும் உணவு ஒன்று.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

# உங்களுக்குத்தெரியுமா?.......

01-கூடுகட்டும் பறவைகள்...
கொக்கு, காகம், மைனா, பருந்து, கழுகு, புறா.

02-கூடு கட்டாத பறவைகள்...
குயில், கோழி, தாரா, வாத்து, மயில்.

03-மரப்பொந்தில் வாழும் பறவைகள்...
மரங்கொத்தி, கிளி, மீன்கொத்தி, செம்பகம்.

04-புற்றில் வாழும் பிராணிகள்...
எறும்பு, கறையான், பாம்பு, உடும்பு.

05-நிலப்பொந்தில் வாழ்பவை...
எலி, அகிளான், நத்தை, தவளை.

06-குகையில் வாழும் உயிரினங்கள்...
வெளவால், புலி, சிங்கம், நரி.

07-இரவுவேளையில் நடமாடும் உயிரினங்கள்...
ஆந்தை, வெளவால், நுளம்பு, மின்மினிப்பூச்சி.

08-கூர்மையான பார்வையுடைய பறவைகள்...
ஆந்தை, கழுகு, கொக்கு, மீன்கொத்தி

09-கூட்டாக வசிக்கும் பறவைகள்..
காகம், புறா, கிளி, கொக்கு.

10-இளமைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை
வெளவால்.

11-நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்கள்..
பாம்பு, உடும்பு, முதலை, ஆமை

12-உருவத்திலும் நிறையிலும் கூடிய உயிரினங்கள்...
யானை, திமிங்கிலம். காண்டாமிருகம்.

13-மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம்கொண்ட உயிரினங்கள்...
நாய், நரி, காட்டுநாய், பாம்பு.

14-பாலூட்டிப் பறவை..
வெளவால்.

15-உணவு உண்ணாமல் நீண்டகாலம் வாழக்கூடியவை...
நத்தை, தேரை.

செல்வி ஜயந்தினி சிவானந்தம்
றீத் மிஷன் - கிளிநொச்சி

# நல்நெறியில் தண்ணீர்.......

நல்நெறி வீ.நந்தகுமார்-யேர்மனி

தண்ணீர் இரத்தத்துடன் உடலின் சகல பகுதிகளையும் நிரப்பிப் புத்துயிர் ஊட்டுகின்றது.

தண்ணீர் மன அமைதியையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் மருந்து மாத்திரைகளை விலக்கி வாழ வழி கோலுகின்றது.

தண்ணீர் தலைச்சுற்று, மயக்கம், இருமல், சளியைப் போக்கும்.

தண்ணீர் கோபத்தைக் குறைத்துக் கடுமையான நோய்களிலிருந்தும் பாதுகாக்கும்.

தண்ணீர் உடற்சூட்டைக் குறைத்து அழுக்கை அகற்றி அழகைப் பெருக்கும்.

தண்ணீர் அறுகம்புல் சேர்ந்த சாறு இரத்தவிருத்தி செய்து உடல் உறுதி பெருக்கும்.

தண்ணீர் அப்பிள் சேர்ந்த சாறு மூளை, கல்லீரல், மலக்குடல் நோய்களை அகற்றும்.

தண்ணீர் அத்திப்பழம் சேர்ந்த சாறு ஆஸ்த்மா, மூலநோய்கள் நீங்கும்.

தண்ணீர் கரட் சேர்ந்த சாறு கண்பார்வை, தோல் நோய்கள், முடி உதிர்தல் நீங்கும்.

தண்ணீர் பாகற்காய் சேர்ந்த சாறில் இன்சுலின் உள்ளது, விஷத்தன் மைகளை நீக்கும்.

தண்ணீர் பசளி சேர்ந்த சாறில் விட்டமின் ஈ, சீ, உள்ளது, மலச்சிக்கலை மாற்றும்.

தண்ணீர் வேப்பிலை சேர்ந்த சாறில் ஆஸ்த்மா, கல்லீரல், காய்ச்சல், தோல்நோய் மாறும்.

தண்ணீர் முள்ளங்கி சேர்ந்த சாறில் காலை, மாலை குடிக்க நீர்க்கோவை குணமாகும்.

தண்ணீர் பேரீச்சம்பழச்சாறில் இரும்புச் சத்துள்ளது, இரத்தத்தை சுத்தமாக்கும்.

தண்ணீர் தக்காளிப்பழச் சாற்றில் இரத்தத்தை சுத்தமாக்கி, புற்று நோயை எதிர்க்கிறது.

தண்ணீர் சோயா சேர்ந்த சாற்றில் எலும்பு பலவீனங்களை நீக்கி, உறுதியாக்குகிறது.

தண்ணீர் பாதாம்பருப்பு சேர்ந்த சாற்றில் மூளைப்பலம், ஞாபகசக்தி, நோய்த்தடுப்புண்டு.

தண்ணீர் தேசிக்காய்ச் சாறு: சோர்வு, செமிபாடு, புற்றுநோய், உடல்பருமன் குணமாகும்.

தண்ணீர் உள்ளிச் சாறு: கொழுப்பு, இரத்த அழுத்தம், புற்று நோய்களைச்சீ ராக்கும்.

தண்ணீர் மணத்தக்காளிச் சாறு: வயிற்றுப்புண், நாக்குப்புண், அல்சர், குணமாகும்.

தண்ணீர் இஞ்சிச்சாறு: வாய்வு, வயிற்றுக் கோளாறுகள், சோர்வு, நீக்கி சுகமாக்கும்.

தண்ணீர் உப்புக் கலந்து வாய் கொப்பளித்தால்: வாய், தொண்டை, பல்நோ நீங்கும்.

தண்ணீர் தானும் உணவாகி, மருந்தாகி, தரணியைத் தளைக்கச் செய்கிறது

## சேகரியுங்கள்.....

-அன்பு மூலம் உறவைச் சேகரியுங்கள்.
-கல்வி மூலம் அறிவைச் சேகரியுங்கள்.
-காதலின் மூலம் கவிதையைச் சேகரியுங்கள்.
-உண்டியலின் மூலம் பணத்தைச் சேகரியுங்கள்.
-கொடுப்பதன் மூலம் நீண்ட ஆயுளைச் சேகரியுங்கள்.
-கவிதைகள் மூலம் நல்ல கருக்களைச் சேகரியுங்கள்.
-புத்தகங்கள் மூலம் நல்ல அறிவுகளைச் சேகரியுங்கள்.
-நண்பர்கள் மூலம் அன்பைச் சேகரியுங்கள்.
-தர்மத்தின் மூலம் புண்ணியத்தைச் சேகரியுங்கள்.

திருமதி ஜெயா நடேசன்

# சொல் அறிவு........

**இலக்கியம்:-**

இலக்கு + இயம் = இலக்கியம் ஆயிற்று. இலக்கு என்பதற்கு ஒரு குறிப்பிட்ட, கொள்கை, நோக்கம் என்பன பொருளாகும். இயம் என்பதற்கு இயம்புதல், சொல்லுதல், விளம்புதல் என்பன பொருள் ஆகும். இவை பெரும்பாலும் செய்யுள் நடையில் அமைந்தன ஆகும்.

**ஆறு:-**

ஆறு என்பதற்குப் பாதை, வழி, ஒழுங்கு, முறை, நெறி எனப்பல பொருள் கொள்ளலாம். இது நல்ல வழி, தீய வழி என்ற பொருள்களில் நல்லாறு, தீயாறு என வழங்கப்படும். நீர் ஓடும்பாதை, வழி ஆறு எனப்பட்டது. மேலும் கரையின் இரு பக்கங்களிலும் நீர் ஓடி ஓடி மண்ணை அறுத்து அறுத்துக் கரைப்பதால் - அறு அறு அறு என்றாகி முதல் எழுத்து நீண்டு அஃது ஆறு ஆயிற்று.

**குழம்பு:-**

உப்பு, புளி, மிளகாய், காயம், கடுகு, எண்ணெய், மஞ்சள் தூள், காய்கள் பலவற்றைத் தண்ணீரில் - அரிசியைக் களைந்த கழுநீரில் போட்டுக் குழப்பிச் செய்வதால் அது குழப்பி- குழம்பு ஆயிற்று. இதன் வடமொழிப் பெயர் சாம்பார் ஆகும்.

**தோசை:-**

இரும்புக் கல்லில் (அரிசி + உழுந்து) மாவை ஊற்றித் தோய்த்துச் செய்வதால் இது (தோய் + செய்) தோசை ஆயிற்று. மேலும் இரண்டு பக்கமாகப் (இந்தியில் தோ என்பதற்கு இரண்டு என்பது பொருள்) புரட்டிப்போட்டுச் செய்வதால் (தோ + செய்) தோசையும் ஆயிற்று.

மு குப்புலிங்கம் - தமிழ்நாடு
நன்றி:''' ஏழைதாசன்''''
சஞ்சிகை

# குறளும் பொருளும்

பற்றினை விடுதல்: -

341. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

342. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

343. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

347. பற்றி அடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

# குறளும் பொருளும் (பற்றினை விடுதல்)

341. ஒருவன் எந்தெந்தப் பொருட்களை விலக்குகிறானோ, அந்தத்தப் பொருட்களால் உண்டாகும் துன்பங்களை அடையமாட்டான்.

342. எல்லாம் பொருட்களையும் விட்டு விடுபவர்களுக்குப் பல இன்பங்களும் உண்டாகும். அவ்வின்பங்களை அடைய எல்லாப் பற்றுக்களையும் விட்டுவிட வேண்டும்.

343. துறவுள்ளம் கொண்டவர்கள் ஐம்புல ஆசைகளையும் ஒழித்துவிட வேண்டும். பொருள்களின் மேல் செல்லும் எல்லாப் பற்றுக்களையும் விட்டுவிட வேண்டும்.

344. எதன்மேலும் பற்றில்லாமல் இருப்பதே தவத்திற்கு இயல்பாகும். ஏதாவது ஒன்றிடம் கொள்ளும் பற்று அத்தவத்தைக் கெடுப்பதற்கு வழியாகும்.

345. பிறப்பற்றுதலை விரும்பியவருக்கு உடம்பும் தேவையற்றது என்றான பின்பு பொருத்தமற்ற சில தொடர்புகள் உண்டாவது எதனால்.

346. யான், எனது என்று சொல்லும் அகந்தையை அழித்தவன் தேவர்களுக்கும் அரிதான உலகத்திற்குச் செல்வான்.

347. உடல் பொருள் ஆகியவற்றின் மீது கொண்ட பற்றினை விடாதவரைப் பிறவித் துன்பங்கள் பற்றிக்கொள்ளும்.

348. முற்றும் துறந்தவர்களே வீடுபேறு அடைவார்கள். மற்றவர்கள் பிறப்பாகிய வலையில் அகப்படுவார்கள்.

349. இரு வகைப் பற்றுக்களையும் விட்டவனே பிறவா நெறியினை அடைவான். அப்பற்றுக்களை விடாதபொழுது பிறந்து, இறந்து வரும் நிலைமை காணப்படும்.

350. பற்றற்ற கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக்கொள்ள வேண்டும். பிற பற்றுக்களை விடுவதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



**அளவை:-**

அன்றாடம் ஓடிக்கொண்டிருந்த பேரூந்தின் சக்கரத்தைப் பார்த்துத் தெரு கேட்டது. "மண் முழுவதும் சுற்றிவருகிறாயே நீ பெற்ற அனுபவம்தான் என்ன" சக்கரம் அமைதியானது. பின்பு அது தெருவைப் பார்த்துச் சொன்னது...நான் என்னையே பலமுறை சுற்றி அளந்து கொள்கிறேன் அதனால்தான் உலகத்தையே அளந்து வருகிறேன். திரும்பவும் தெருவைப் பார்த்து "புரிகிறதா" என்று கேட்டது சக்கரம். அது சொன்னது...

"தன்னை அளந்தவன் மண்ணை அளந்தவன்"

**சண்டித்தனம்:-**

"எல்லோரையும் அடித்து நொறுக்குவேன்" இடியோசையோடு சண்டித்தனத்தில் இறங்கியது மின்னல். ஒரு நொடிதான். வளைந்து நொறுங்கி அது முறிந்து விழுந்தது. மண்ணில் இருந்தபடியே மின்னலின் சண்டித்தனத்தையும் வீழ்ச்சியையும் பார்த்த தவளை சொல்லியது

"சண்டியாய் எழுவான் நொண்டியாய் விழுவான்"

# தெரிந்துகொள்வோம்....

## வறட்சி......

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மழை கிடைக்காமையினால் ஏற்படுகின்ற சூழல் நிலைமை வறட்சி ஆகும். ஆயினும் வறட்சி என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உதாரணத்திற்குச் சிரியா நாட்டில் வருடாந்த மழைவீழ்ச்சி 180MM இதற்குக் குறைவுபடுமாயின் அங்கு அது வறட்சி நிலையாகக் கொள்ளப்படுகின்றது. அமெரிக்காவில் இரண்டு தினங்களுக்கு 25MM இற்கு மழை குறைவடையுமாயின் அது வறட்சியாக அங்கு கருதப்படுகின்றது. இலங்கையிலும் அந்தக் காலநிலை வயலத்திற்குரிய சராசரி மழைவீழ்ச்சி 75% இற்குக் குறைவடையுமாயின் அப்பிரதேசத்தில் வறட்சி என்று கூறப்படுகின்றது. பலகாலமாக மழையில்லாது வறண்ட மற்றும் நீர்ப்பற்றாக்குறையுள்ள நிலப்பகுதி வறட்சியால் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான சூழலில் வேளாண்மை மிகவும் குறைந்த அளவிலேயே நடைபெறுவதுடன் வறட்சியான பிரதேசங்களில் வறுமையும் பாரிய அளவிலேயே காணப்படுகின்றது.

## ஐஸ்பழம் ( Popsicle)

1905ல் பதினொரு வயதான பிரேங்க் எபர்ஸன் என்ற சிறுவனால் எதிர்பாராத விதமாக ஐஸ்பழம் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவின் கலிபோர்ணியா மாநிலத்தின் ஒக்லாந்தில் வசித்த இந்தச்சிறுவன் மிகக்குளிரான வேளையில் அருந்திக்கொண்டிருந்த பழச்சாற்றுடன் அங்கிருந்த மரத்துண்டு ஒன்றைப் போட்டு மேசையில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டான். இரு நாட்களின் பின்பு வந்து பார்த்தபோது கட்டியாக (திண்ம நிலையில்) மரத்துண்டுடன் அந்தப் பழச்சாறு இருப்பதை அவதானித்தான். இதுவே எப்ஸிகல் என்ற பெயர்கொண்டு அனைவராலும் அழைக்கப்பட்டது. எப்ஸிகல் ஆங்கில மொழியில் Epsicle என்பதாக எழுத்தின் மூலம் எழுதப்பட்டது. பின்பு இதற்கான அனுமதிப் பத்திரம் எபர்சனுக்குக் கிடைத்தவுடன் எப்ஸிக்கன் என்ற பெயரானது பொப்ஸிக்கல் Popsicle எனப்பெயர் மாற்றம் பெற்றது. இதுவே இன்றுவரை அனைவராலும் விரும்பப்படுகின்றது.

செல்வி இ கீர்த்தனா
நீந் மிஷன் - கிளிநொச்சி

# குறுக்கெழுத்துப்போட்டி-164
(ஆடி + ஆவணி 2018)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-06 இலங்கையில் ஆடிமாதம் நடைபெற்ற இனப்படுகொலைகளை இந்த யூலைப் படுகொலை எனவும் அழைப்பார்கள்

26-28 அழகு சாதனப் பொருள்.

29-32 காற்றில் ஏற்றி விளையாடுவது. படித்தும் பெறலாம்.

37-40 நல்ல போதனைகளைப் போதித்த உத்தமர்.

46-49 அரசன் ஒத்த சொல்லாகும்.

வ-இ

07-06 தாயகத்தில் இனிப்பான பழம்தரும் மரம்.

14-12 வெள்ளித்திரையிலும் சின்னத்திரையிலும் இந்தப்பாத்திரம் உண்டு.

26-22 சீதனம் என்று சொல்லப்படுவது ஒத்தசொல்.

34-32 ஒரு நோய்.

46-44 கடல்வாழ் உயிரினம்.

கீ-மே

16-02 தானியவகைகளில் ஒன்று.

24-10 இலங்கையின் போரினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம்.

34-13 பிரயாண சாதனங்களில் ஒன்று.

43-22 பற்கள் உறுதியாகவும் அழகாகவும் இருப்பதற்கு நல்ல இதைப் பாவிக்க வேண்டும்.

மே-கீ

01-22 இன்றும் பல நாடுகளில் இப்படியாகவும் தண்டனை வழங்கப்படும்.(கு)

04-25 யாழ்குடாநாட்டில் ஒரு ஊர்.

05-40 உலக அழியாப்புகழ்பெற்ற நாடக தத்துவவியலாளர்.

21-49 கணவனை இழந்தவள் விதவை..மனைவியை இழந்தவன் இவன்....

34-41 வீடுகட்டுவதற்குப் பயன்படும் ஒரு கடினமான பொருள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

WELCOME TO THE 21ST CENTURY!!!

Our Phones ~ Wireless
Cooking ~ Fireless
Cars ~ Keyless
Food ~ Fatless
Tyres ~ Tubeless
Dress ~ Sleeveless
Youth ~ Jobless
Leaders ~ Shameless
Relationships Meaningless
Attitude ~ Careless
Feelings ~ Heartless
Education ~ Valueless

Mobile comes - Camera gone
Mobile comes - Wrist Watch gone
Mobile comes - Torch gone
Mobile comes - Radio gone
Mobile comes - MP3 gone
Mobile comes - Letters gone
Mobile comes - Calculator gone
Mobile comes - Computer gone
Mobile comes - Peace of mind gone

@ People becoming mental & Phones becoming Smart

---

**பணம்....**

பணம் எதிலிருந்து வருகிறது காகிதத்திலிருந்து வருகிறதுகாகிதம் எதிலிருந்து வருகிறது மரக்கட்டையிலிருந்து வருகிறது மரக்கட்டை எங்கிருந்து வருகிறது மரத்திலிருந்து வருகிறது அப்போ இப்ப பதில் சொல்லுங்கள் பணம் எங்கிருந்து வருகிறது மரத்திலிருந்துதானே வருகிறது இனிமேல் யாராவது பணம் என்ன மரத்தில் காய்கிறதா என்று கேட்டால் ஆமாம்...ஆமாம்...என்று சொல்லுங்கோ!...

# உணவே மருந்தாக........

12 காய்கறிகளை கொண்டு அனைத்து நோய்களையும் குணப்படுத்தமுடியும்
Kidney Failure : கத்திரிக்காய்
Paralysis : கொத்தவரங்காய்
Insomnia : புடலங்காய்
Hernia : அரசாணிக்காய்
Cholesterol : கோவைக்காய்
Asthma : முருங்கைக்காய்
Diabetes : பீர்கங்காய்
Arthritis : தேங்காய்
Thyroid : எலுமிச்சை
High BP : வெண்டைக்காய்
Heart Failure : வாழைக்காய்
Cancer : வெண்பூசணிக்காய்

### உணவுப் பழக்கம் பழமொழி வடிவில்

காட்டிலே புலியும் , வீட்டிலே புளியும் ஆளைக் கொல்லும்.
போன ஜீரத்தை புளி இட்டு அழைக்காதே
பொங்குற காலத்தில் புளி.. மங்குற காலம் மாங்காய்
சீரகம் இல்லா உணவும் , சிறு குழந்தைகள் இல்லா வீடும் சிறக்காது.
எண்ணைக் குடத்தை சுற்றிய எறும்பு போல
தன் காயம் காக்க வெங்காயம் போதும்
வாழை வாழ வைக்கும்
அவசர சோறு ஆபத்து
ஆறிய உணவு மூட்டு வலி உண்டாக்கும்
இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு
ரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை
இருமலைப் போக்கும் வெந்தயக் கீரை
உஷ்ணம் தவிர்க்க கம்பங் களி
கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்
குடற்புண் நலம் பெற அகத்திக்கீரை
கொலஸ்ட்ரால் குறைக்க பன்னீர் திராச்சை

சித்தம் தெளிய வில்வம்
சிறுநீர்க் கடுப்புக்கு அன்னாசி
சூட்டைத் தணிக்க கருணை கிழங்கு
ஜீரண சக்திக்கு சுண்டக்காய்
தலை வலி நீங்க முள்ளங்கிச் சாறு
தேனுடன் இஞ்சி ரத்தத் தூய்மை
பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி
மூல நோய் தீர வாழைப்பூ
கூட்டுவாந்திக்கு மருந்து மணத்தக்காளி
வாத நோய் தடுக்க அரைக் கீரை
வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்
பருமன் குறைய முட்டைக்கோஸ்
பித்தம் தணிக்க நெல்லிக்காய்

"உணவு மருந்தாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மருந்தே நமக்கு உணவாகும் நிலைமை உருவாகும்" நலம் உடன் வாழ்வோம்... எல்லோருக்கும் பயன்படட்டும்
Dr.NK.Gobinath B.S.M.S (CENCER SPECIALIST) 9444522298, 9445226034.

---

## உயிராபத்து!......

சீனாவில் நடந்த துயரச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். சுற்றுலா சென்ற சீனர் ஒருவர் அங்கு கடையில் விற்பனை செய்ய வைத்திருந்த பலாப்பழத்தை வேண்டிச் சாப்பிட்டுவிட்டுக் கூடவே கொக்கோ கோலாவையும் (Coco Cola) அருந்தி இருக்கிறார். இதனால் சிறிது நேரம் கழித்து நெஞ்சடைத்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மருத்துவமனைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்தபோதுதான் உண்மை தெரியவந்துள்ளது...அது என்னவென்றால் பலாப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு உடனே Coco Cola அருந்தியதால் அது விஷமாக மாறியிருக்கிறது. இப்படிச் சாப்பிடுவது 5 அடி நாகபாம்பின் விஷத்திற்குச் சமனாம். அதனால் தயவு செய்து பலாம்பழம் சாப்பிட்டு எட்டு மணிநேரத்திற்கு Coco Cola; PEPSI போன்ற பானங்களை அருந்தாதீர்கள். தயவுசெய்து இவ்விடையத்தை அனைவரும் கவனித்துக் கொள்ளுங்கள். இல்லையேல் உயிராபத்துக்களும் நேரிடலாம்...

# மன்னிப்போம்...மறப்போம்....

மன்னிப்பைப் பற்றி மருத்துவம் சொல்வது பகீர் தகவலாக உள்ளது. நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் ரொம்ப வலுவாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப் போகிறது. அதன் பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகி விடும் என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள்.

மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள் என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள். கேம்பைன் பார் பர்கிவ்னஸ் ரிசர்ச் சுமார் 48 ஆராய்ச்சிகளின் முடிவை விலாவரியாக எடுத்துரைக்கிறது. எல்லா ஆராய்ச்சிகளுமே மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாக அடித்துச் சொல்கின்றன. ஸ்டான்போர்ட் பல்கலைக் கழக பேராசிரியர் தனது லேர்ன் டு பர்கிவ் (மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்) எனும் நூலில் மன்னிப்பின் மகத்துவத்தையும், அது தரும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் பற்றி பிரமிப்பூட்டும் வகையில் எழுதியிருக்கிறார்.

மன்னிப்பவர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்பும் குறைவு என்கின்றன ஏல் மெடிக்கல் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள். மன்னிக்கும் மனம் நமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். மன அழுத்தத்தை குறைக்கும். இதுவே காரணமாம். இந்தியா மதங்களின் நாடு. மதங்கள் எல்லாமே மன்னிப்பைப் பேசுகின்றன. ஒரு மனிதன் தேவ நிலையை அடையவேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும் என்கிறது பகவத் கீதை. இஸ்லாம் கடவுளை அல் கபிர் என்கிறது, முழுமையாய் மன்னிப்பவர் என்பது அதன் அர்த்தம். மன்னிக்க மறுப்பவர்கள் சுவர்க்கம் செல்ல முடியாது என்கிறது கிறிஸ்தவம். ஆனால் மதங்களைப் பின்பற்றும் நமது நாட்டில் மன்னிப்பு எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக இருக்கிறது?

நாட்டில் நடைபெறும் இன்றைய நிகழ்வுகளை மீடியாக்களில் பார்த்தாலே உண்மைத்தன்மையை தெரிந்துகொள்ள முடியும்.. மன்னிப்பு சட்ட திட்டங்களால் வருவதில்லை. மன்னிக்கும் மனதுடைய மக்களுடன் பழகும் போது நம்மை அறியாமலேயே அந்த நல்ல பழக்கமும் நம்முடன் வந்து ஒட்டிக் கொள்கிறது. மன்னிக்கும் மனநிலை பெற்றோருக்கு இருந்தால் பெற்றோர்களைப் பார்த்து வளரும் குழந்தைகள் மன்னிக்கும் மனநிலையை எளிதாகவே பெற்று விடுவார்கள். குழந்தைகளுக்கு மன்னிக்கும் மனம் இயல்பாகும்போது எதிர்கால சமூகம் வன்முறைகளின் வேர்களை அறுத்துவிடும். அடுத்தவர்களுடைய மனநிலையில் இருந்து கொண்டு நமக்கு நேர்ந்த கசப்பான நிகழ்வை யோசித்துப் பார்த்தால், பெரும்பாலான கோபங்கள் விலகிவிடும்.

குறிப்பாக கணவன் மனைவி, குடும்பத்தினருக்கு இடையேயான பிணக்குகள், எரிச்சல்கள், வெறுப்புகள் போன்றவையெல்லாம் கதிரவன் கண்ட பனிபோல விலகிவிடும். பலவேளைகளில் நாம் கோபத்தை விட்டு விட ரொம்பவே தயங்குகிறோம். கோபம் என்பது வீரத்தின் அடையாளம் என்று போலியாக கற்பனை செய்து கொள்கிறோம். எதிர் நபர் மன்னிப்புக்குத் தகுதியற்றவர் என்று முடிவு கட்டி விடுகிறோம். அப்படி நினைப்பதன் மூலம் நாம் பெரியவர்களாக முயலும் உளவியல் சிக்கலே இது. மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ, செல்வத்தினாலோ கட்டப்படுவதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது. உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும். மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள். மன்னிப்புக் கேட்காதவர்களையும் மன்னிக்க மறக்காதீர்கள்..... மன்னித்து மகான் ஆகுங்கள்...

---

பொன்மொழி:-

தங்கத்தட்டில் நீ சாப்பிட்டாலும் பணக்கட்டின்மேல் நீ படுத்துறங்கினாலும் ஒரு நேரப் பசியைப் போக்கியவனை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

## நம்மை அறியாமலேயே தினமும் பேசும் சமஸ்கிருத சொற்கள் சில...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

க

கர்ப்பக்கிருகம் - கருவறை
கர்மம் - செயல்
கலாச்சாரம் - பண்பாடு
கலாரசனை - கலைச்சுவை
கல்யாணம் - மணவினை, திருமணம்
கஷ்டம் - தொல்லை, துன்பம்
கீதம் - பாட்டு, இசை
கீர்த்தி - புகழ்
கீர்த்தனை - பாமாலை, பாடல்
கோஷம் - ஒலி

ச

சகலம் - எல்லாம், அனைத்தும்
சகஜம் - வழக்கம்
சகி - தோழி
சகோதரி - உடன் பிறந்தவள்
சங்கடம் - இக்கட்டு, தொல்லை
சங்கதி - செய்தி
சங்கோஜம் - கூச்சம்
சதம் - நூறு
சதா - எப்பொழுதும்
சதி- சூழ்ச்சி
சத்தம் - ஓசை, ஒலி
சந்தானம் - மகப்பேறு
சந்தேகம் - ஐயம்
சந்தோஷம் - மகிழ்ச்சி
சபதம் - சூளுரை
சம்சாரம் - குடும்பம், மனைவி
சம்பந்தம் - தொடர்பு
சம்பவம் - நிகழ்ச்சி
சம்பாதி - ஈட்டு, பொருளீட்டு
சம்பிரதாயம் - மரபு
சம்மதி - ஒப்புக்கொள்
சரணாகதி - அடைக்கலம்
சரித்திரம் - வரலாறு
சரீரம் - உடல்
சருமம் -தோல்
சர்வம் - எல்லாம்
சாதாரணம் - எளிமை, பொதுமை
சாதித்தல்-நிறைவேற்றுதல், விடாது பற்றுதல்
சாதம் - சோறு
சாந்தம் - அமைதி
சாகசம் - துணிவு, பாசாங்கு
சாராமிசம் - பொருட்சுருக்கம்
சாயந்திரம்- மாலைவேளை, அந்திப் பொழுது
சாவகாசம்-விரைவின்மை
சாஸ்திரம் - நூல்
சாசுவதம் - நிலை
சிகிச்சை - மருத்துவம்
சித்தாந்தம் - கொள்கை, முடிவு
சித்திரம் - ஓவியம்
சிநேகிதம் - நட்பு
சிம்மாசனம் - அரியணை
சிரத்தை - அக்கறை, கருத்துடைமை
சிரமம் - தொல்லை
சின்னம் - அடையாளம்
சீக்கிரமாக - விரைவாக
சுதந்திரம் - தன்னுரிமை, விடுதலை
சுத்தமான - தூய்மையான

(அடுத்த இதழில் தொடரும்)

## கைக்கூ கவிதைகள்...

புத்தகம்!...
நேசிக்கும் நண்பனை விட
நேர்த்தியைக் கற்றுத்தரும்
நல்ல உயிர் நண்பன்.

புவி!...
ஐவகைக்கூறுகளின்
ஒற்றுமையை
அகிலமாக்கிய தேவதை.

முகமூடி...
போலிகளையும்
சாயம்பூசிக் காக்கும்
அங்கவஸ்திரம்.

நட்பு...
உயிருக்கு மேலான
உறவு உலகிலே
நிலைப்பது அரிது.

வசந்தா ஜெகதீசன்

## முனைப்பில் ஒரு முகிழ்....

முனைப்பிலே ஒரு முகிழ்வு
முன்னேற்றம் பகிரும்
முழுமைபெற்ற வாழ்வுதனை
முட்டி நின்று மோதும்
ஆழமுற்ற கடலினை
அடைகிறது நதிகள்
அலைவந்து கரைதொட்டு
மீள்கிறது கடலில்
வாழ்வு தந்த உராய்வுகளே
வளம் சேர்க்கும் உளிகள்
வற்றாத பொய்கையின்
வாசத்து மலர்கள்
நித்தம் நாம் சந்திக்கும்
நிதமான கணங்கள்
சுகமான சுமையாக
சுமக்கின்ற வரங்கள்
அர்த்தமுடன் ஆக்கி
நின்ற அரணமைப்பின்
உலகில் தடைதாண்டும்
வாழ்க்கையே தன்னம்பிக்கையின்
தூண்கள்
புடமிட்ட பொன்போல பிரகாசம்
ஆகும்
அணிகலன்கள் ஆக்கமுற்று
வாழ்க்கை நிலை கூறும்
குன்றிலே விளக்கான
குவலயத்துச் சொத்து
மனையிலே பெண்களென்றால்
மறுப்பதற்கு ஏது?.......

## பாட்டில் ஒரு கதை...

(கவி மீனா)

விடை இல்லா காதல் இது
வேடிக்கையாய் போனது
காத்திருந்து காத்திருந்து
எடை கூடிப் போனது மடை போட்டு
கல்யாணம் நடக்காமல்
கோயில் நடை சாத்திவிட்டதே!

இரட்டைச் சடை அசைய அவள்
இடை காட்டி சேலையும் மறுநாள்
துடை காட்டி சட்டையும் போட்டு
அழகிய நடை போட்டு வருகையில்
அதைகண்டு கண்கள் படபட என்று
அடிக்கமனம் பக்பக் என்றுபதைக்க

பாழாய்போன காதல்வந்துவதைக்க
மடை திறந்த வெள்ளம் போல்
காதல் கவிதை வந்து பொங்க
மட மட என காதல் கடிதம் எழுதி
படை கொண்ட வீரனைப் போல்
நடை நடந்து சென்று
அவள் கண்ணோடு கண்ணோக்கி
கை அணைப்பில் கொடுக்க
விட்டாளே ஒரு கதை  கன்னம்
வீங்கிப் போக கடை வீதிபக்கத்திலே

என் காதலுக்கு தடை போட்டஎன்
காதலியை மறக்க மனம்கூடலையே
சீடை முறுக்கு வடை தின்ன
மனமும் இல்லை உடைமாற்ற
தெம்பு இல்லை பசியில்லை
தூக்கமில்லை ஏக்கம்தான்
நெஞ்சினிலேவிடை இல்லா காதல்
இது வேடிக்கையாய் போனதே!.....

## மனமே புகையாதே....

(கீத்தா பரமானந்தன்)

கணமும் நிலைப்பதில்லை
காலமும் நிற்பதில்லை
கலைந்திடும் முகிலினமாய்
கனவுகள் தினம் பிறக்கும்

ஆற்றல்கள் அகத்தின் உள்ளே
அனுதினம் சரம் தொடுக்கும்
அற்புதக் கோட்டைகளை
அழகாய் எழுப்பி நிற்கும்

பாதைகள் தினம் புதிது
பயணங்கள் வகை தினுசு
படைத்தவன் விதித்து விட்டான்
பயனது தொடர்கதையாய்

நினைத்தவை முடிவதில்லை
முடிந்தவை நினைத்ததில்லை
கிடைத்தவை இன்பங்களாய்
ஏற்றவர் மனதில் முல்லை

தோற்றங்கள் ரசிப்பதற்கே
தோல்வியாய் எண்ணாதே
மாற்றமே நொடியின் விந்தை
மறுத்திட முடியா எல்லை
முகவுரை வரைந்தவனே
முடிவுரை  எழுதிவிட்டான்

தினம் நீ அலைந்திடவும்
திட்டங்கள் தீட்டி வைத்தான்
மனமே புகையாதே
மலராய் மணம் வீசு......

# அவளும் நம் தாயே!...

(மதன் - லண்டன்)
தேடலில் பிடித்தது)

அழகான மனைவிக்கு அன்பான கணவன் எழுதியது
நான் காலையில் படுக்கையிலிருந்து எழும்புகிறேன்
நீ நெருப்புப் புகையோடு போராடிக் கொண்டிருக்கிறாய்.
நான் பல் துலக்குகிறேன் நீ பாத்திரங்களை புதுப்பிக்கிறாய்.
நான் செய்தித்தாளில் செய்திகளை சேகரிக்கிறேன்.
நீ வீட்டில் குப்பைகளை பெருக்குகிறாய்.
நான் உடலை சுத்தம் செய்கிறேன். நீ ஆடைகளின்
அழுக்குகளை பிரித்துக் கொண்டிருக்கிறாய்.
நான் பசியாற வயிற்றை நிரப்புகிறேன்.
நீ பாத்திரங்களை நீரால் நிரப்புகிறாய்.
நான் அலுவலகம் கிளம்புகிறேன்.
நீ பிள்ளைகளை சீருடையில் அனுப்பி விட்டு
என் முறைக்காக காத்திருக்கிறாய்.
நான் இரவு வீடு திரும்புகிறேன்.
நீ இன்னும் திரும்பவில்லை சமையலறையிலிருந்து.
நான் தூங்கச்செல்கிறேன். நீ கதவின்
தாழ்ப்பாள்களையும் எரியும் மின்விளக்குகளையும்
பிள்ளைகளின் போர்வைகளையும்
சரிபார்த்து விட்டே படுக்கையில் விழுகிறாய்.
ஒவ்வொரு ஞாயிறுகளும் ஒவ்வொரு
பண்டிகைகளும் எங்களுக்கு ஓய்வு நாட்கள்
உனக்கு? உறவு வீட்டு விழாக்களில்
எங்களிடத்தில் நீ! கல்விக்கூடங்களின்
கேள்விகளுக்கான பதில் நீ! சோக
நிகழ்வுகளிலும் கண்ணீர் சிந்திய படி
நீ! எங்களின் பிரதிநிதியாக கோவில்களிலும்
நீ! என் வாழ்க்கைத்தோழியே!
இப்போதெல்லாம் நான் வேலை செய்கிறேன்
என்று சொல்லவே தயக்கமாக இருக்கிறது
கழிந்த பொழுதின் உன் ஒற்றைப் பதிலால்..
புள்ளிவிபரம் சேகரிக்க வந்த அரசு ஊழியர்
உன்னிடம் கேட்டார் ' வேலைப் பார்க்கிறீர்களாமா?'
உன் பதில்.. இல்லை......நான்......
வீட்டில சும்மாதான் இருக்கிறேன்...'மனைவியை நேசிப்போம்,

## என்வழி...... தனிவழி..... (கவின்மொழிவர்மன்)

உறவுகளில் அக்கறை காட்டினேன்,
என்னையே கண்கானிக்கிறாய் என்றார்கள்!
எனது வேலையை மட்டும் பார்த்தேன்,
அக்கறையில்லாதவன் என்றார்கள்!
பிறருக்காக கலங்கினேன்,
பிழைக்கத்தெரியாதவன் என்றார்கள்!
எனது நலனைமட்டும் கவனிக்கத் துவங்கினேன்,
சுயநலக்காரன் என்றார்கள்!
பெரியோரை மதித்துப்பழகினேன்,
நடிப்புக்கள்ளன் என்றார்கள்!
எவரையும் பாராமல் என்வழி சென்றேன்,
திமிர்பிடித்தவன் என்றார்கள்!
சொந்தப் பிழைப்பை கவனித்தேன்,
சமூகத்தில் அக்கறையில்லாதவன் என்றார்கள்!
சமூகத்திற்காக உழைத்தேன்,
பொறம்போக்கு என்றார்கள்!
பெற்றோரிடம் பரிவு காட்டினேன்,
திருமணம் செய்திருக்க வேண்டாம் என்றார்கள்,
மனைவியின்மீது அன்புகொண்டேன்,
பொண்டாட்டி தாசன் என்றார்கள்!
விரயமின்றி சேமித்து வைத்தேன்,
கஞ்சப்பையல் என்றார்கள்!
தாராளமாக செலவு செய்தேன்,
ஊதாரிப்பையல் என்றார்கள்!
எந்தநேரமும் அன்புகொண்டேன்,
உயிரை வாங்குகிறேன் என்றார்கள்!
என் வழியே நான் சென்றேன்,
பந்தபாசமில்லாத ஜடம் என்றார்கள்!
உழைத்து நன்றாக சம்பாதித்தேன்,
அற்பனுக்கு வந்த வாழ்வைப்பாரு என்றார்கள்! ஊர்சுற்றி திரிந்து வந்தேன், இதெல்லாம் எங்கே பிழைக்கப்போகுது என்றார்கள்! வாழ்ந்தாலும் ஏசிடும் தாழ்ந்தாலும் ஏசிடும் உலகினில், மனமொன்றே மகேசனாய் என்வழி நான்சென்றேன்! இன்பங்கள் பல இதயத்தில் கொண்டேன்!.....

# மண்சஞ்சிகையின் 189வது இதழின் அட்டைப்படக் கவிதை:




பெய்கின்றமழைத்துளிகள் பெருவெள்ளமாய்ப்பெருகிப்பாய்ந்து
பேறெனவேபயிர்களுக்கும் பிறஉயிர்களுக்கும் உணவாகுவதாய்
வையகத்தைப்புதுப்பித்துவாழ்வாங்குயாவரும் வாழ்வதற்கும்
வுழிகாட்டிய இவர்களின் வழித்தடங்களைபின்பற்றுதலேசிறப்பாகும்...

மெய்யாகவாழ்ந்துசிறந்துமேதினியையேவியக்கவைத்து
மேன்மையுள்ளஎண்ணங்களால் மிகவுயர்ந்துதிசைகாட்டிகளாய்
பொய்யான இவ்வுலகவாழ்வைஎமக்குப் புரியவைத்துஅறிவூட்டிய
போதிமரங்களெனபோதித்த இவர்களைபோற்றுதலேமுறையாகும்...

கொய்திடாதமலரனையப்பூத்துக்குலுங்குகின்ற இப்பூமிப்பந்தின்
குளிர்ச்சிக்கும்மகிழ்ச்சிக்கும் கூடவரும் இவர்களின் தடங்கள்
செய்கைகளில் பதிவுகளாய் சேவைகளின் வதிவுகளாய்வாழ்ந்து
சீரானமனிதம் தளைத்திடவைத்தவரைச்சிறப்பித்தலேநம்கடனாம்...

தைகளிலேதொடங்குமாண்டாய் தனிமனிதஒழுக்கநெறியில்தொடங்கி
தன்நலம் பேணாதுதைரியமாய் தரணிக்காய் சேவைசெய்யும் பணியை
கைகளிலேஎமக்களித்துவாழ்வினைக் காதலித்துவாழப்பணித்து
காலமெல்லாம் கலங்கரைவிளக்கானவரைகடைப்பிடித்தலேபண்பாகும்...

அம்பலவன்புவனேந்திரன்.

# இதயத்தைக் கருக்கிச் சருகாக்கிய இருண்டஆடி.

எண்ணங்களெல்லாம்மழுங்கியே இருஇமைகளும் பொசுங்கியபடி
இதயத்தால்குருதிசொட்டச்சொட்டஎம்மண்ணின்வேதனைகள்
உண்ணும்பொழுதெல்லாம் உற்றஉறவாய்ச் சகோதரமாய்
உதவிகளும் பகிர்வுகளும் உள்ளத்துள்ளோகொடும்குரூரங்கள்
பண்ணியதெல்லாம் மறந்துபகைவர்களாய் மாறிப்போய்-எமக்கு
பாடைகள் கட்டிதெல்லாமேபலநாளின் உங்கள் திட்டமிடல்கள்...

அண்ணனாயும் தங்கையாகவும் அன்புப்பகிர்வும் அரவணைப்பும்
அடிமனதின் ஆழத்தில் அமிழ்ந்திருந்தஉணராஇனத்துவேசங்கள்
கண்களைத் தோண்டியெடுக்கும் காட்டுமிராண்டிகளைபுரிந்திடாமல்
கலவரத்தைகண்டதும் உங்களதுகயமையைக் கண்டோமே
எண்ணிலடங்காஎமதுறவுகளின் இனப்படுகொலைகள்-என்றுமே
இருள்சூழ்ந்தஆடிகளாய் எம்வாழ்வின் இரணமாகிவதைக்கும்..

புண்ணாகிப் போயின்றும் புரையோடியவதைகளுக்குள் சிக்கித்திணறி
புல்லர்களின் செய்கைகளில் இன்னும் புதைந்துகிடக்கும் பாராமுகம்
மண்ணின் மைந்தர்களின் மரணங்களேமலிவாகிப்போகுமென்றால்
மானமுள்ளதமிழர்களின்மரிப்புகளும் மனமகிழ்ச்சிமறைமுகமாய்
திண்ணமாய் உள்ளங்களில் திரட்டிவைத்தவக்கிரங்கள்-திடீர்
தீயாய்க் கொழுந்துவிட்டெரிக்கக்காரணம் தீந்தமிழினவழிப்பேதான்...

கண்முன்னேநடந்தகொடுமைகள்கழுத்தறுந்தஎத்தனைஉடலங்கள்
குளனியாற்றங்கரைகளெல்லாம் கரையொதுங்கியகொடுங்காட்சிகள்
எண்ணெய் ஊற்றியெரித்தஎத்தனையெத்தனை இளைஞருடல்கள்
இரத்தஆற்றில் மிதந்தஎம்மினத்தின் எதிகாலத்துவாரிசுகள்
வண்ணங்களாய்க் கோலமிட்டவாழ்வின் கனவுகளெல்லாம்-வற்றி
வரண்டுபோனஎதிர்காலத்தில் வாழும் வாழ்வெல்லாம்வலிக்கிறது...

அம்பலவன்புவனேந்திரன்.

# படித்ததில் பிடித்தவை.........

1-

## கற்றவர்களுக்கு எல்லாம் எளிமைதான்.......

ஒருசமயம் நடன அரங்கேற்றம் ஒன்றில் கலந்துகொண்டார் கலைஞர் கருணாநிதி. அவரைப் பரதம் என்ற சொல் பற்றிப் பேசுவதற்கு அழைத்தனர். கலைஞர் எழுந்து மேடையில் தோன்றிப் பேச ஆரம்பித்தார். பரதம் என்பதற்கு நான் ஒரு புது விளக்கத்தைச் சொல்கிறேன் கேளுங்கள் என்றார்.
பரதம் என்ற சொல்லிலுள்ள "ர" வைத் தனியாக எடுத்துக் கொள்ளுங்கள் அந்த "ர" என்ற எழுத்தின் அடியிலுள்ள படுகைக் கோட்டை வெட்டிவிடுங்கள் இப்போது படித்துப் பாருங்கள் "பாதம்"என்ற சொல் வரும். பாதம்தான் நடனக்கலைக்கு உயிர் போன்றது. இப்போ மீண்டும் பரதம் என்று எழுதிக் கொள்ளுங்கள். இதிலுள்ள முதல் எழுத்தான "ப" என்ற சொல்லை நீக்கிவிட்டுப் படியுங்கள் "ரதம்" என்ற சொல் வரும். நடனமாடக்கூடிய பெண்கள் ரதம் (தேர்) போல தம்மை அலங்கரித்துக்கொண்டு நடனம் ஆடினால்தான் அந்த நடனம் சோபிக்கும்.
இப்போது மீண்டும் பரதம் என்ற சொல்லை எழுதிக் கொள்ளுங்கள் முன்னாலுள்ள இரண்டு எழுத்துக்களான "பர" என்ற எழுத்துக்களை எடுத்துவிடுங்கள் "தம்" என்ற எழுத்துக்கள் வரும். இந்தத் "தம்"மட்டும் இல்லாவிட்டால் ஒரு பெண்ணால் நடனமே ஆடமுடியாது என்று கூறி முடித்தார். கேட்டுக்கொண்டிருந்த சபையோர் விண் அதிரக் கரம் கொட்டினர். இப்படியாகத் தமிழோடு விளையாடி தமிழுக்குப் பெருமைசேர்க்கும் கற்றவர்கள் உலகில் இருக்கிறார்கள்தான். ஆகவே "கற்றவர்களுக்கு எல்லாம் எளிமைதான்" என்ற உண்மையை நாம் அறிந்துகொள்வோம்!...

2-

## அடிமைத்தனம் பற்றிய சில உண்மைகள்...

நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் உலக அடிமைத்தனம் பற்றிய உண்மைகள் நிறையவே உண்டு. இன்றளவும் நம்மையே அறியாமல் ஏதோ விடயத்தில் நாம் அடிமையாகத்தான் வாழ்ந்து வருகின்றோம். வாழ்க்கையின் பல சூழலில், தருணங்களில் நாம் வாழ்கிறோம்

என்பதைவிட, பிழைக்கின்றோம் என்பதுதான் உண்மை. பண்டைய காலம் முதல் இன்றுவரை உலகில் பல இடங்களில் அடிமைத்தனம் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

இந்த நவநாகரீக கணனி உலகமயமானாலும் வானுக்கு ரொக்கட்விட்டாலும் உலகின் அதிக அடிமைகள், அடிமைத்தனத்திலுள்ள மக்களின் எண்ணிக்கையில் உலகின் முதலிடம் வகிக்கும் நாடு இந்தியாவாகும். பண்டைய ரோம ராஜ்ஜியத்தில் அடிமைகள் மற்றும் அவர்களது தலைவர்கள் இடம் மாற்றிக்கொள்ளும் பண்டிகை வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

1790ல் அமெரிக்க நாட்டவரான பெஞ்சமின் பிராங்ளின் அடிமைத்தனத்தை அழிக்க வேண்டும் என்று சபதமெடுத்தார். பண்டைய கிரேக்கம் மற்றும் ரோம் தேசங்களில் அடிமைகள் உப்புக் கொடுத்து விலைபேசப்பட்டு வாங்கப்பட்டார்களாம்.

ரோமாபுரியில் அடிமைகள் கொடுமைப் படுத்தி வேலை வாங்குவதற்குப் பதிலாக பல தலைவர்கள் போனஸ் கொடுத்து அதிக வேலையை வாங்கினர். இப்போது உலகக் கம்பனிகள் இதே முறையைத்தான் கையாண்டு வருகின்றன.

அமெரிக்க வெள்ளை மாளிகையின் ஒரு பகுதி அடிமைகளால் கட்டப்பட்டதாம். அதில் முதன் முதல் குடியிருந்த கறுப்பினத்தவர் அல்ல கலப்பு இனத்தவர்தான் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா குடும்பம்.

இப்படியாக மனித அடிமைகள் அன்றும் இன்றும் பல நாடுகளில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். வளங்களும் கல்வியும் பொருளாதாரமும் உயரும்போதுதான் இந்த அடிமைத்தன்மைகளும் மாற்றமடையும் என அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். அடிமைத்தனங்களை ஒழிக்க நாமும் பாடுபடவேண்டும்.!...

திருமதி இராஜேஸ்வரி சிவராசா

# அப்துல்கலாம்......



இந்தியாவின் ஏவுகணை விஞ்ஞானி, ஆராய்ச்சியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர், பன்முக ஆளுமைகொண்டவர்.

முழுப்பெயர் அப்துல்கலாம் A.P.J. Abdul Kalam
Avul Pakir Jainulabdeen Abdul Kalam
பிறப்பு 15-10-1931 இராமேஸ்வரம் - இந்தியா

கல்வி St Joseph's College, Tiruchirappalli (1954)
Madras Institute of Technology (1955-1960

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி (3வது இஸ்லாமிய இனத்தவர்)
இந்தியாவின் 11வது ஜனாதிபதி
பதவிக்காலம் 25-07-2002 - 25-07-2007
இறப்பு 27-07-2015 இந்தியா

இந்தியாவின் மிகப்பெரிய விஞ்ஞானி மட்டுமல்ல அதிஉயர் பதவியான ஜனாதிபதவியையும் அலங்கரித்தவர்தான் அப்துல்கலாம் என்னும் கல்விமான். இவர் 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரத்தில் பிறந்தார். இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த இவர் தனது தொடக்கப் பள்ளியை இராமேஸ்வரத்தில் தொடங்கினார். உயர்படிப்பைத் திருச்சியிலுள்ள புனித ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954ம் ஆண்டு இயற்பியலில் "இளங்கலைமாணி" (பி.ஏ) பட்டம் பெற்றார்.

ஆனால் இயற்பியல் கல்வியில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர் 1955ம் ஆண்டு விண்வெளிப் பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி கல்லூரியில் தொடர்ந்தார். பின்னர் அதே கல்லூரியில் "முதுமாணி" (எம்.ஏ) பட்டம் பெற்றார். 1960ம் ஆண்டு வானூர்த்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் விஞ்ஞானியாகத் தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடர்ந்தார். தன்னுடைய ஆராய்ச்சியின் வெளிப்பாடாக இந்திய அரசின் பாதுகாப்புத் துறைக்கு ஒரு சிறிய உலங்குவானூர்த்தியை (ஹெலிகொப்டரை) வடிவமைத்துக் கொடுத்தார்.

பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர் துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். இதனால் இவர் இந்திய ஏவுகணை நாயகன் என்று பிரபலமாக இவர் பாராட்டப்படுகின்றார். 1980ம் ஆண்டு ரோகினி-1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார்.

இது அவருக்கு மட்டுமல்லாமல் இந்தியாவிற்கே சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு அவருக்கு 1981ம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பத்மபூஷன்" "பாரதரத்னா" விருதுகளை வழங்கிக் கௌரவித்தது. இந்தியாவின் 11வது குடியரசுத்தலைவராகப் பணியாற்றிய இவர் இந்தியாவின் சிறந்த நிர்வாகியாகவும் அறிஞராகவும் கருதப்படும் மேதையாவர்.

இந்தியன் இன்ஸ்டிடியூட் அ∴ப் மனேஜ்ஸ் மென்டின் மேடையில் பேசிக்கொண்டிருந்த வேளையில் மயங்கி விழுந்து மரணமடைந்தார். 83வயதுவரை வாழ்ந்த இவர் இறுதிவரை திருமணம் முடிக்காமல் வாழ்ந்திருக்கிறார். இந்தியாவின் சிறந்த குடிமகனாகவும் உலகின் சிறந்த விஞ்ஞானியாகவும் அறிஞராகவும் வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்.

"கனவு காணுங்கள், கனவு காணுங்கள், கனவு காணுங்கள்
கனவுதான் சிந்தனையாகவும் சிந்தனைதான் செயலாகவும்
மாறுகின்றது" -அப்துல் கலாம்-

செல்வீஸ்ரீ கீர்த்தனா
ரீத் மிஷன் - கிளிநொச்சி

# இந்துவின் பக்கம்....

தற்கால ஊடகங்களான சமூக வலைத் தளங்களில் கடல்போலவே தகவல்கள் மற்றும் அறிவியல் விடையங்கள் கொட்டிக்கிடப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த விடையங்களை எமது வாசகர்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நல் நோக்கில் அவற்றை திருமதி இந்து அவர்கள் திரட்டித் தருகின்றார். நீங்களும் படித்துப் பாருங்கள்...

## வௌவால் - நிபா வைரஸ் - கார்ப்பரேட் சதி .....

தற்போது வெகு வேகமாக ( பொய்யாக ) பரப்பப்பட்டு வரும் நிபா வைரஸ் பற்றிய உண்மை. மேலும் இதற்கும் வௌவாலுக்கும் என்ன சம்பந்தம் . கீழே படியுங்கள் ... அறிந்துகொள்ளலாம். முதலில் வௌவால் பற்றி பார்க்கலாம். இவை முக்கியமாக மனிதர்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய பூச்சி, கொசு, வண்டு மற்றும் ஈக்களை தங்கள் முக்கிய உணவாக உட்கொள்கின்றன. வௌவால்கள் காலனியாக(கூட்டமாக) வாழக்கூடியது. இந்த வௌவால்களின் ஒரு காலனி(கூட்டம்) ஒரு இரவில் 250 டன் (இரண்டு லச்சத்தி ஐம்பது ஆயிரம் கிலோ) எடையுடைய பூச்சி, வண்டு மற்றும் கொசுக்களை தங்கள் உணவாக உண்ணுகின்றன. ஒரு சிறிய பழுப்பு நிற வௌவால் (Little brown bat) ஒரு மணி நேரத்தில் 600 கொசுக்கள் வரைப் பிடித்து உண்ணக்கூடியவை.

மேலும் இவைகள் தங்கள் உணவாக பழங்களான வாழை, மாம்பழம், கொய்யா பேரிச்சை, அத்தி ஆகியவற்றை உண்பதனால் வௌவால்களின் மூலம் 500 க்கும் மேற்பட்ட தாவரங்களின் அயல் மகரந்தச்சேர்க்கை நடைப்பெற பெரிதும் துணைச்செய்கின்றன. மேலும் இவற்றின் கழிவுகளில் மிக அதிக அளவிற்கு நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் உள்ளதால் மிகச்சிறந்க உரமாக பூமிக்கு அமைந்துவிடுகின்றன. வௌவால்களின் வாயில் சுரக்கும் உமிழ் நீரிலிருந்து மனிதர்களுக்கு ஏற்படும் இதய சம்பந்தமான நோய்க்கு மருந்து தயாரிக்கப்படுகின்றது. மேலும் மூளைக்கு செல்லும் இரத்தம் தடைப்படுவதை தடுக்கவும் காயங்களிலிருந்து வெளியேறும் இரத்தத்தை விரைவில் உறைய வைக்கவும் இவை பயனாகின்றன.

சரி ...இப்போது நிபா வைரஸ் முக்கியமாக வௌவால்கள் மூலம் பரவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் பொய்தான். மீடியாக்கள் கையில் இருப்பதால் பொய் வேகமாக பரவுகிறது. இப்போது என்ன நடக்கும்.......? நிபா வைரஸ் பரவாமல் தடுக்கிறேன் என்ற பெயரில் வௌவால்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்படும். அரசாங்கமே கூட இதை ஊக்குவித்துப் பரிசும் கூடத் தரலாம் . ஒரு காலத்திற்கு மேல் வௌவால்கள் பெருமளவு குறைந்து விடும். அப்போது கொசுக்கள் வரைமுறை இல்லாமல் பெருகும். இதனால் நோய்கள் பெருகும் . அயல்மகரந்த சேர்க்கை குறையும். தீய பூச்சிகளின் எண்ணிக்கை பெருகி பயிர் உற்பத்தி பாதிக்கும். இதனால் கார்பெரேட் கம்பெனிகளுக்கு கொண்டாட்டம்.

விதவிதமான கொசுவர்த்திகள் பெருகும். நல்ல லாபம். உணவு பொருள்களை இறக்குமதி செய்யலாம். நல்ல லாபம். பல்வேறு நோய்கள் பெருகும். மருந்து கம்பெனிகளுக்கு லாபம். நமக்கு பட்டை நாமம். இது மட்டுமில்லை ....நிபா வைரஸுக்கு மருந்து என்று இல்லாத ஒன்றை விற்கலாம் . நல்ல லாபம். நிபா வைரஸுக்கு தடுப்பூசி என்ற பெயரில் பள்ளிகள் முதல் பஸ் ஸ்டாண்ட் வரை உங்களிடம் கட்டாயப்படுத்தி போட வைக்கலாம் . நல்ல லாபம். சிந்திக்கத் தெரியாத மக்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களுக்கு கொண்டாட்டம். கார்பரேட் சரியாக வருமான காய் நகர்த்துகிறான்..புரிந்துகொள்ளுங்கள்.

இப்படிக்கு.......
ச.செந்தில்குமார் வர்மா மருத்துவர், அக்குபஞ்சர் சிகிச்சையாளர், இயற்கை மருத்துவர்.

---

## தகவல்:-

பள்ளி என்னும் சொல் சமணர்களால் நடத்தப்படும் கல்வி நிலையங்களையும் குறிக்கும்.. அப்போதே பெண்கள் மட்டும் பயிலும் கல்வி நிலையங்கள் ( Girls school) இருந்துள்ளது.. இதை பெண்பள்ளி என்றே அழைக்கின்றனர். மாணவிகளை, மாணாக்கியர் என அழைத்துள்ளனர். ஆண் ஆசிரியர்களை குரவர் என்றும், பெண் ஆசிரியர்கள் குரத்தி என்றும் அழைக்கப்பட்டனர்.. மதுரை கொண்ட கோப்பரகேசரி முதலாம் பராந்தகனின் 38 ம் ஆண்டு கல்வெட்டு ( கி.பி.945) மூலம் இச்செய்திகளை அறிகிறோம்.

# சிரி.......சிரி.........சிரிப்பு!....

பாலு:-என்னுடைய சம்பளக்கவர் தொலைந்துவிட்டது..
வேலு:- அதை ஏன்? சிரித்துக்கொண்டு சொல்கிறாய்..
பாலு:-கவர் மட்டும்தான் தொலைந்தது..பணம் அப்படியே இருக்கிறது..

சிவன்:-அந்தத் தியேட்டர் கடையில இஞ்சிச்சோடா எக்கச்சக்கமாய் விலைப்படுதாமே..
நவீன்:-ஏனாம்..
சிவன்:-அங்கு ஓடுற படத்தின் முடிவை ஒருவராலும் ஜீரணிக்க முடியவில்லையாம்..

குணம்:-கணபதிக்கும் கம்பியூட்டருக்கும் என்ன வித்தியாசம்..
நவம்:-இரண்டிற்கும் அருகிலேயும் மவுஸ்(எலி) இருக்குமே..

தரகர்:-பொண்ணுக்குக் கொஞ்சம் வாய் நீளம் பரவாயில்லையா..
தந்தை:-அதனாலென்ன.. என் பையனுக்குக் கொஞ்சம் கை நீளம் அவ்வளவுதான்..

வீட்டுக்காரி:-எதுக்கு இப்படி வீடு வீடாக வந்து பிச்சை எடுக்கிறியள்...
பிச்சைக்காரி:-என்ன செய்வது..வீடு தேடிவந்து பிச்சை போடுகிற அளவுக்கு மக்களிடம் தர்மசிந்தனை வளரல்லையே..

சிவா:-பொண்ணுகளை இடிச்ச குற்றத்திற்கு அவனுக்குத் தூக்குத் தண்டனையாம். இது மிக அதிகமாகவல்லோ கிடக்குது..
தயா:-அவன் புல்டோசராலையல்லோ இடித்தவனாம்.

கண்ணன்:-உன் மனைவி சமையலில் உப்பை வாரிக்கொட்டுகிறாளாமே ஏன்...
பொன்னன்:-அவளை யாரும் மறந்துவிடக்கூடாதாம்..

மனோகரி:-உன் புரிசன் பயங்கரக் கோபக்கரானாமே..
சுந்தரி:-ஆமாம்...வர...வர உங்க சமையல் சரியில்லை என்று சொல்லிட்டான்..இரண்டு நாட்களாக அவர் சமைக்கவும் இல்லை.. துணிகளைத் துவைக்கவும் இல்லை...

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலர்-



வணக்கம்... வணக்கம்.... என்ன எல்லாரும் சுகம்தானே.. சுகமாய் இருப்பீர்கள் என்றுதான் நினைக்கிறன். நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன். இந்த மயிலன் சென்றகாலங்களில் எழுதிய பல விடையங்களை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்றுதான் நம்புகிறேன். ஒருவராவது மனம் திருந்தினால் இந்த மயிலனுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுவான் பாருங்கோ!.....

சரி...சரி...இப்ப வெளிநாடுகளில் வெய்யிலும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. மழையும் இடைக்கிடை வந்து தன் கைவரிசையைக் காட்டிச் செல்லுது. இருந்தாலும் இந்த வெய்யிலைக்கண்டால் வெள்ளைக் காரருக்கு இல்லையெண்ட சந்தோசம்தானே. வருடம் முழுக்க நாலைந்து உடுப்புக்களைப் போட்டுக்கொண்டு திரியிறவைக்கு இந்த வெய்யிலெண்டால் ஒரு சட்டைத்துணியோடு, காற்றுப்படச் சந்தோசமாகத் திரிவினம். ஆனால் நம்மவர்களுக்குத்தான் பலருக்கு இப்போ வெய்யில் ஒத்துவருகு தில்லைக் கண்டியளோ. ஏனென்றால் பாருங்கோ வெய்யிலோட கண்கடி, தொண்டை நோவு, மூக்கால சளிவடிதல், ஒவ்வாமை (அலர்ஜி) தோல் வருத்தம் என்றெல்லாம் வந்து மனிசரைப் பாடாத பாடுபடுத்தும் பாருங்கோ...

ஆனால் நமது இளசுகளைப் பொறுத்தளவில் இந்த வெய்யிலைக் கண்டால் சந்தோசம்தான். வெள்ளைக்கார இளசுகளைப் போல அரை குறைச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு, பியரும் அடித்துக்கொண்டு, கண்குளிரக் காட்சிகளைக் கண்டு

களிப்பதில்தான் எத்தனை சுகம் கண்டியளோ. இந்தக் காட்சிகளைப் பார்க்க யாருக்குத்தான் மனம்வராது. இந்த மயிலனும் வருடாவருடம் கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்டு ரசித்து மகிழ்வது உண்மைதான் பாருங்போ. சரி...சரி...இனி விசயத்துக்கு வருகிறேன்.

வெய்யில் தொடங்கிவிட்டால் ஊர், உலக மெல்லாம் கலகலப்புத்தானே. நமது பிறந்த ஊர்களிலும் வருடம் முழுவதும் வெய்யிலென்றாலும் பங்குனி, சித்திரையில்தான் கடும் வெய்யில். இந்தமுறை இந்த வெய்யில் ஊர்ச்சனங்களை நித்திரை கொள்ளக்கூட முடியாத அளவுக்கு வாட்டி வதைத்ததாம். ஆனால் பாருங்கோ இந்த வெய்யில் கொடுமையிலும் நோய்வந்து பலர் செத்தும் இருக்கினம். இதைவிட களவு, கொலை, வழிப்பறி, கர்ப்பழிப்பு என குற்றச் செயல்களுக்கு நம் தாயகத்தில் குறைவே இல்லையாம். முள்ளிவாய்க்காலைச் சாட்டி அரசியல் வளர்க்கிறவர்களும், மேடை மேடையாகத் கத்தித் திரிகிறவர்களும் ஒருபுறம். வாகன விபத்துக்களால் இறப்பவர்களும் அதிகரித்துவிட்டதாம். எல்லாம் வெளிநாட்டுக்காசு செய்யிற வேலைதான் பாருங்கோ...

விசயத்தைப் பார்த்தால் வெய்யில் தொடங்க ஊரிலும் வெளிநாடு களிலும் கோவில் திருவிழாக்களும் கோலாகலமாகத் தொடங்கிவிடும் கண்டியளோ..கோவில், சமயம், பக்தி, பண்பாடு, பாரம்பரியம் எனப்பேசிக்கொண்டு பலர் வெளிக்கிட்டிடுவினம். இப்ப கண்டியளோ ஊரிலுள்ள அத்தனை கோவில்களும் திருத்தி இடித்துக் கட்டி, வர்ணம்பூசி, வடிவமைத்து திருவிழாக்கள் ஓகோ என்று போட்டி போட்டுக்கொண்டு நடைபெறுகின்றது.

இதைவிட இருக்கிற அழகானகோயிலை உடைத்து, கோடிக் கணக்கான செலவில் புதுக்கோவில் கட்டப்படுகிறது. வெளி நாட்டிலுள்ள பத்த கோடிகளின் கைங்கரியம் என்றுதானே சொல்லவேண்டும். இந்தத் தர்மத்தைப் பயன் படுத்தி ஐயர்மார், குருக்கள்மார், நிர்வாகிகள், மேளகாரர்கள், சோடனைக் காரர்கள், அவர்,இவர் என்று நல்ல பிழைப்புத்தான் நடக்கிறது பாருங்கோ. தற்போதய இந்த நிலமையைப் பார்த்து ஒரு எழுத்தாளன் சொன்னான் ''கோவிலைக் கட்டுங்கோ கும்பிடத்தான் ஆட்களில்லை'' இந்த வார்த்தையில் எவ்வளவு அர்த்தம்இருக்குது நீங்களும் ஒருக்கா யோசித்துப்பாருங்கோவன்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் சும்மா இலேசுப்பட்டவர்களா?..வெய்யில் வந்தால் கோவில்களின் திருவிழாக்களும் வரிசையாக ஆரம்பிக்க, ஒரே நாளில் இரண்டு மூன்று கோவில் திருவிழாக்கள், ஒரே நகரத்தில் நடைபெறுவது வழக்கத்திற்கு வந்துவிட்டது. அந்த அளவுக்குப் பக்தகோடிகளின் பக்திப்பரவசம்தான் பாருங்கோ. கோவில்களை வைத்து வியாபாரம் செய்வதும் பிழைப்பு நடத்துவதும் பலருக்கு வேலையாகிப்போட்டுது. இந்தியா விலிருந்தும் இலங்கையிலிருந்தும் மலிவான விலைக்கு இறக்குமதி செய்து பவுணிலும் டொலரிலும் யூரோவிலும் விற்பனைசெய்து சுளை...சுளையாகப் பணம் சம்பாதிக்கும் கூட்டம். அதிரடி, தேரடி மலிவு விலை என்று சொல்லி ஏமாற்றிப் பிழைக்கும் இன்னும் பல கூட்டங்கள் இப்போ சுற்றித் திரியுதுகள் பாருங்கோ!...

புலம்பெயர் நாடுகளில் அடுத்த வேடிக்கை என்னென்று பார்த்தால் சனி அல்லது ஞாயிறுதான் தேர் உருளும். மற்றைய நாட்களில் உருளவே உருளமாட்டாது. சனி ஞாயிறில்தான் சுவாமிகள் தீர்த்தமாடுவார்கள். மற்றைய நாட்களில் சுவாமிகள் குளிக்கமாட்டினம் கண்டியளோ. இவை மட்டுமா..யார்? யாருக்கு அன்னதானம் கொடுப்பது என்று தெரியவில்லை. சில இடங்களில் இது ஒரு பாசனாகவும் போட்டுது. சிலர் அன்னதாம் கொடுத்துத் தமது கௌரவம், புகழ், அந்தஸ்த்தைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இப்படியாக அனைத்துமே வியாபாரமாக மாறியதால் சமயமும், பூசையும், பக்தியும் விலைபேசும் அளவில்தான் காணப்படுவதை நினைத்து இந்த மயிலன் வேதனைப்படுகிறான் கண்டியளோ...

இந்தக் கோவில் திருவிழாக்களால் பலர் இன்று நல்லா உழைத்துவிட்டார்கள் அவர்களும் அவர்களது பிள்ளை குட்டிகளும் வசதியான வீடு, விலையுயர்ந்த கார், ஆடம்பர வாழ்க்கைமுறைக்கு மாறிவிட்டார்கள். ஊர்க்காசுகளைக் கொள்ளையடித்து உண்டு கொழுக்கும் கூட்டத்துக்கு காசை அள்ளிக் கொடுப்பது பக்தகோடிகள்தானே. அப்ப ஏன் அவர்களைக் குற்றம் கூறுவான் பாருங்கோ.. எல்லாம் இந்தச் சாமிகளுக்குத்தான் வெளிச்சம் பாருங்கோ. கொடுக்கிற பக்தகோடிகள் இருக்கும்வரை இப்படியாகப் பிழைப்பு நடத்துபவர்கள் காட்டில் நல்ல மழைதானே பொழியும்..

தாயகத்தில் இடிந்து அழிந்த கோவில்கள் எத்தனை, கோயில்களைவிட்டு இடம் பெயர்ந்தவர்கள் எத்தனைபேர், இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் எத்தனை கோவில்கள் அழிந்துவிட்டன. எத்தனை கோவில்கள் இடிபாடுடன் காணப்படுகின்றன. மக்கள் இடம்பெயர்ந்து வழிபாடு, பூசை, அன்னதானம் இல்லாமல் தவிப்போர் எத்தனை ஆயிரம்பேர், குடும்பத் தலைவர்களை, உறவுகளை இழந்து பரிதவிப்பவர்கள் எத்தனைபேர், விதவைகள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள், நோயாளிகள் எத்தனைபேர் என இப்படி அடுக்கிக்கொண்டு போகலாம். இவர்களுக்கு ஒரு சில கோவில்களைத் தவிர நூற்றுக்கணக்கான கோவில்கள் ஏதும் உதவிகள் செய்கிறார்களா? இவர்களை எல்லாம் நாம் ஒருதடவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கண்டியளோ.

புலம்பெயர் நாடுகளில் வாழும் நம்மவர்களின் செயற்பாடுகளை எப்படிச் சொல்வது. இனிப்பக்தி என்று சொல்லிக்கொண்டு கோவில் திருவிழாக்களென்றால் லொறிக் கணக்கில் தேங்காய்களை தெருக்க ளெல்லாம் உடைத்து வீதிகளையும் பழுதாக்கி குற்றப்பணமும் கட்டி, இறுதியில் லொறிக் கணக்கான தேங்காய்களைக் கழிவுதொட்டிகளில் கொட்டி நிரப்பும் செயலை யார் செய்கிறார்கள். இந்தப் பக்தகோடிகள்தானே. தாயகத்தில் ஒருவேளை கஞ்சி குடிக்க ஒரு தேங்காய் இல்லாம் வறுமையில் மக்கள்வாட, இங்க தேய்காய் அடித்து கும்பிடும் பக்தர்களை எப்படி அழைப்பது. ஒருக்கா நீங்களும் யோசியுங்கோ..

புலம்பெயர் தமிழர்களை, கோவில்களைச் சாடுகிறான் இந்த மயிலன் என்று யாரும் எண்ணிவிடாதையுங்கோ... சமயம் பக்தி என்ற பெயரில் இடம்பெறும் அநியாயங்களையும் வியாபார தந்திரங்களையும்தான் இந்த மயிலன் சுட்டிக்காட்டுகிறான். சமயங்களையும் தமிழ்களையும் வைத்துப்பிழைப்பு நடத்தும் கூட்டத்தினர் மீது கவனமாய் இருங்கோ.. நூறு நாள் கோவிலுக்குப்போய் கும்பிடுவதை விடஒருநாளைக்கு ஏழைகளுக்கு உணவளிப்பவன் தான் உயர்ந்தவன் என்று இந்த மயிலன் கருதுகிறான். நீங்கள் எப்படி என்று...நீங்களே யோசித்துப் பாருங்கோ.. நல்லதையே யோசியுங்கோ... நல்லதையே செய்யுங்கோ. உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும். அப்ப வரட்டே..மீண்டு அடுத்த இதழில் சந்திக்கிறன். வணக்கம்!....

# ஆடி பிறப்பு..........

கவி மீனா

"ஆடி பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்று சிறுவர்களுக்கான பாடலும் உண்டு அதை எமது யாழ்பாணத்து சோமசுந்தரப் புலவர் பாடி வைத்தார் அன்று. இதோ அந்தப் பாடல் வரிகள்...

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!
பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல் பச்சை அரிசி இடித்துத் தள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,
வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே வேலூரின் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!
பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி போட்டு மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள் மணக்க மணக்க வாயூறிடுமே
குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை ஆடிப் பாடிப்பும் படைப்போமே
வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே
வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்லமாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக் கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக் கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே
ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்த மானந்தம் தோழர்களே....

கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே! -நவாலியூர் சோமசுந்தரப் புலவர்-

ஆடி பிறப்பு வருகுது என்றாலே எங்க வீட்டிலை ஒரு வாரத்துக்கு முதலே அமளியாக வேலைகள் ஆரம்பமாகி விடும் கூழும், கொழுக்கட்டையும் அம்மா செய்ய வேணும், அதற்கான பொருட்களை வாங்கிச் சேர்த்து உடனே உரலிலை அரிசி மாவு கையாலே இடித்துதான் அன்று கூழ் காச்சுவார்கள். இனிப்புக் கூழும் கொழுக்கட்டையும் எனக்கு மிகவும் பிடிக்கும், எப்படா ஆடி பிறப்பு வரும் என நான் ஆவலோடு காத்திருப்பேன், எனது தாயார் செய்யும் கூழும் குடிக்கக் குடிக்க தெவிட்டாது, அவதிப்பட்டு சூட்டோடு குடித்து நாவு அள்ளுப்பட்டது கூட இன்றும் ஞாபகத்தில் உள்ளது.தேங்காய் சொட்டுகள் வெட்டிப் போட்டு அரிசி மாவில் உருண்டைகள் செய்து அவித்துப்போட்டு பயறும் சர்க்கரை ஏலக்காய் தூளும் போட்டு காய்ச்சும் ஆடிக் கூழின் சுவையோ சொல்லி மாழாது ஆடிப்பிறப்பு ஆடி மாதத்திலும் கோடைகால வெப்பம் குறைய, மழையை வரவேற்று நடாத்தும் ஒரு விழா, ஒவ்வொருத்தரும் ஆடிப்பிறப்பை ஊரிலை சிறப்பாக வீடுகளில் கொண்டாடுவார்கள் இது தமிழ் ஆடி மாதம் முதலாம் திகதி அன்றே தமிழர்களால் கொண்டாடப் படுகிற ஒரு விழாவாகும்.

ஆடிப்பிறப்பிலை இரண்டு விசேஷங்கள் உண்டு ஒன்று மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள் மழையை வரவேற்பதுண்டு, ஆடி பட்டம் தேடி விதை என்று ஒரு பழமொழி உண்டு ஆடி மாதம் நெல் விதைத்தால் தை மாதம் அறுவடை செய்து, புது அரிசி எடுத்து பொங்கல் வைப்பது தமிழர்களது பாரம் பரிய பழக்கமாகவும் இருப்பதால் இந்த ஆடி மாதம் மழை வர வேணும் நெல் விதைக்க வேணும் என்பதே இந்த ஆடிப்பிறப்பின் சிறப்பு அம்ஷமாகும், மற்றது ஆடி பிறந்தாலே அம்மனுக்குரிய மாதமாக கருதபடுகிறது அதனால் அவவுக்கு பிடித்த கூழை ஆடி மாதம் பூராக அம்மன் கோயிலில் கூழ் காய்ச்சி பக்தர்களுக்கு கொடுப்பது வழக்கமாக உள்ளது.ஆடி மாதத்தில் அனேக விரத நாட்களும் அம்மனுக்காக வருகின்றன ஆடி வெள்ளி, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆடி அமாவாசை என அருமையான விரத நாட்களில் விரதம் இருந்து அம்மனை வழி படுவோருக்கு அம்மன் அருள் கிட்டும் என்பது நம்பிக்கையே!ஆடி மாதம் பிறந்தாலே ஆடி த்தள்ளுபடி துணிக்கடைகளில் வரும் என்பது மட்டுமே சில பேருக்கு தெரியும், மற்றைய சிறப்பு அம்ஷசங்கள், ஆடி மாத விசேஷங்கள் எதுவும் தெரியாமலும் அறியாமலும் அழிந்து போகின்றது இந்த எதிர்காலச் சந்ததியினரிடையே!

# ஆடி அமாவாசையில் ஒரு சிந்தனை....

(கௌசி - யேர்மனி)

நிலைத்து நின்ற கண்கள், நிதானம் இழந்த உணர்வுகள், பேச்சிழந்த வாய், பித்துப் பிடித்ததுபோல் இருக்கையில் இருந்த எனது தந்தை, மெல்லக் கால்களை அசைத்தார். அமைதியாக பூப்பஞ்சணையிலே மலர்ந்த முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த எனது தாய், ஓயாத அங்கங்களுக்கு ஓய்வு கொடுத்து மீளா உறக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தாள். கடமைகள் முடிந்தன. இனி வரும் காலங்கள் பெற்ற பிள்ளைகளானாலும் ஒட்டி உறவாட முடியுமா! எட்ட நின்றே இன்பங் கண்டு களித்திருக்க அநுபவங்கள் ஆணையிட, யாருக்கும் சுமையாக காலம் தள்ளும் சுகம் வெறுத்து மீளா உறக்கம் கொண்டு அழகாகத் தூங்கினாள். அருகே வந்தவர் அவள் கரங்களைப் பற்றினார். ஓ!.... என்று வெடித்தது குரல், கண்களுக்குள் மறைந்திருந்த கண்ணீர் மேகம் உடைத்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது.

உன்ன எங்கே நான் கூட்டிக் கொண்டு போகல்ல. எல்லா இடமும் ஒன்றாத்தானே போனோம். இப்ப மட்டும் தனியாப் போக எப்படி நினைச்சனீ. இந்தியாவிற்கு உன்னைக் கூட்டிக் கொண்டு போய்க் காட்ட வேண்டும் என்று தீராத ஆசை கொண்டிருந்தேனே. ஐயோ!..உன்ன அனுப்பிட்டு நான் ஏன் இஞ்ச!.. நிற்கிறன். நான் என்ன செய்வன்!... வார்த்தைகள் அடங்கவில்லை. அருகே இருந்தவர்கள் அணைத்துக் கொண்டு வெளியே கொண்டு வந்தார்கள். தனது தொழில் நிறுவனத்தில் கூட மாற்றங்கள் வரும் போதெல்லாம் மந்திரிகளின் துணையுடன் மனைவியை விட்டுப் பிரியாது பிரிவின்றி ஒன்றாக வாழ்ந்த தம்பதியினர். இறப்பு ஒன்றுதான் அவர்களைப் பிரிக்கும் என்பது நியதி. அதுவே நடந்தது.

மனைவி தன் அரை உயிரைக் கொண்டு சென்ற உணர்வு அடுத்தடுத்த வாரங்களில் உடலுக்குள் ஒலித்தது. ஓடிக்கொண்டிருந்த இரத்தம் நிலைகுலைந்தது. செல்களுக்குள் ஒரு தவிப்பு பற்றிக் கொண்டது. அவள் இல்லையா! இனி வரமாட்டாளா! இனி எப்போதும் காணமாட்டோமா! தவியாய்த் தவித்தது மனம்.

மனைவியோடு எவையும் போம்!.. என்பதை உடல் உணர்ந்தது. உள்ளத்தால் நொந்து போனார். மெல்ல மெல்ல உள்ளத்து உறுதியை மனைவி கொண்டு சென்று விட்டாள். நாடு விட்டு நானும் அனுப்பப்பட்டேன். பறந்து செல்லும் சிகரெட் புகை என் தந்தையின் கருகிப் போன நுரையீரலுக்கு அடையாளமாக ஆயது. இரத்தப் பரிசோதனை நுரையீரல் புற்றுநோயை அடையாளப் படுத்தியது.

உறவுகள் துடித்தனர். ஹீமோதெரபி செய்வதற்காக மருத்துவமனை சென்றவர் அன்றுதான் உணர்ந்தார். எமக்குள்ளே இருக்கும் இயந்திரங்களை நாம் தானே கெடுக்கின்றோம். உடலுக்குக் கேடு என்று அறிந்தும் இதை புகைத்துத் தள்ளினோமே என்று மனம் வேதனையடைந்தார்.

அன்று ஒரு ஹீமோதெரபி நாள். உடலுக்குள்ளே உள்ள புற்றுநோய் செல்களை மின்சாரத்தால் சுட்டுப் பொசுக்குகின்றார்கள். இச்சமயம் நல்ல செல்களும் இறக்கின்றன. இதனால் உடலுக்குள்ளே உயிர் கொண்ட உறுப்புக்கள் வலியால் துடிக்கின்றன. தாங்கமுடியாத வேதனையால் வாய் புலம்புகின்றார் என் தந்தை.

இந்த சனியனை நான் ஏன் குடிச்சன். மூச்சு எடுக்க முடியல்ல. சத்தி எடுத்தெடுத்து தொண்டை புண்ணாகிப் போயிற்று. அரக்கனா இந்த வருத்தம். ஊருக்கெல்லாம் நல்லது செய்தேனே! எத்தனை குடும்பங்கள் என்னால் வாழகின்றன. கோயிலுக்கெல்லாம் தலைவன் தருமகர்த்தா என்று பெயர் எடுத்தேனே! இந்தப் பொல்லாத வருத்தம் என்னைக் கொல்லாமல் கொல்லுதே! இந்த ச்சாமி தம்பிரான் எல்லாம் எங்க போயிற்று. விடை தேட முடியாத கேள்விகளுக்கு விடை எங்கே பெறப் போகின்றார். பழைய நினைவுகள் இடையிடையே வந்து அவர் வலியை இன்னும் மிதப்படுத்தும்.

மனைவி சொன்ன பல வார்த்தைகள் மனதுக்குள் புண்ணாய்த் தைத்தன. அன்று கூறினாள். அவள் இதயத்துள் எத்தனை பாரங்களைச் சுமந்திருப்பாள். இன்று என் மனப் பாரங்களை இறக்கி வைக்க முடியவில்லையே. நோயாய் வந்திருக்கும் எமன் தீரா வலியைத் தராது என்னைத் தாமதிக்காது தூக்கிச் சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். அப்போதுதான் என் தந்தை

செய்த புண்ணியம் தலை காத்தது. வருடக்கணக்கில் தலைமறைவாகிப் போன ஒரு திடகாத்திர மனிதனைத் தேடிக் கொண்டிருந்தார். அவன் உடல் வலிமை உணர்ந்தவர் என் தந்தை. அவன் இருந்தால், இன்று எனக்கு எத்தனை உதவியாக இருக்கும் என்று மனதால் நினைத்து வாய் விட்டுச் சொன்னார்.

அடுத்த நாள் அவர் கண்முன்னே வந்து நின்றான் அம் மனிதன். என்ன ஆச்சரியம் இவர் நினைத்த எண்ண அலைகள் அவன் மனதுக்குள் புகுந்த ஆச்சரியம் தான் என்ன? அன்று தான் வந்தான் எந்தவித கேள்வியும் இன்றி தந்தையை மெல்லத் தாங்கலாய்த் தூ க்கினான். யாருடைய அனுமதியுமின்றி பணிவிடை செய்யத் தொடங்கினான்.

வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தந்தையை அருகே இருந்து கவனித்தான். அவர் உடலுக்கும் உயிருக்கும் அவன் வருகை ஒரு ஆறுதலாக இருந்தது. நோயின் பலம் குறைந்தது போன்று உணர்ந்தார். ஒரு நாள் இரவு. அவன் கையை தன் நெஞ்சில் வைத்துத் தடவும் படிப் பணித்தார் என் தந்தை. அவனும் தடவிக் கொண்டிருந்தான். ஆழ்ந்து உறங்கிப் போன அவர் உடல் குளிர்ந்து போவதை அவதானித்தவன். அவரை உற்றுப் பார்த்தான் எந்தவித சலனமுமின்றி மீளா உறக்கத்தில் உயிரற்ற உடலுடன் உறங்கிக் கொண்டிருந்த என் தந்தையை அவதானித்தான்.

நான்கு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி, ஊருக்காகப் பாடுபட்டு, உறவுகளை எல்லாம் அணைத்தெடுத்து வாழ்ந்த அந்த உயிர், அன்று நன்றிக்கடன் பட்டவன் மட்டுமே அருகிருக்க பிரிந்து போனது. எங்கிருந்தோ வந்தான். கடைசிக்காலத்தில் பணிபுரிந்தான். ஈமக்கிரிகைகள் முடிந்தவுடன் யாரிடமும் கூறாது, மறைந்து போனான். அவன் இன்று எங்கிருக்கின்றான் என்று யாருக்குமே தெரியாது. யார் அவன்? கடவுளா? இல்லை கடவுள் அனுப்பிய தூதுவனா?

வாழும் போது நாம் செய்யும் நற்காரியங்கள் எங்கள் இயலாக் காலத்தில் வந்து கைகொடுக்கும் என்பதற்கு இச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு.

------------

# நாட்டு நிலவரம்.......

(சென்ற இதழின் தொடர்ச்சி)

(கலைவாணி. ஏகானந்தராஜா)

சென்ற இதழில் நாட்டு நிலரம் பற்றி எழுதியிருந்தேன். மல்லி கலந்த கோப்பி, ஊறுகாய், தயிர், வடகம் இவையெல்லாம் ஊரில் மறைந்து போன, மறந்து போன கதையை எழுதியிருந்தேன். இன்னும் ஒரு விடயத்தை கூற மறந்துவிட்டேன். என் கணவருக்கு நெஞ்சில் சளி பிடித்திருந்தது. தனது அம்மா செய்வதுபோல சாமி அரிசியில் புளிக்கஞ்சி காச்சித்தரும்படி கேட்டார். நானும் அதற்கான ஆயத்தங்களை செய்தேன். சாமி அரிசியா? எங்கு வாங்குவது என்று தெரியவில்லை என்றார்கள். (யேர்மனியில் சகல கடைகளிலும் கிடைக்கும். (Hirse)

நாம் பல கடைகளில் கேட்டோம். தெரியவில்லை என்று தோளைத் தூக்கி சொண்டை பிதுக்கினார்கள். ஒரு கடையில் நின்ற பையன் "இல்லை ஐயா" என்று சென்னதும் உள்ளேயிருந்து முதலாளி "டேய் அந்த சாக்கில் இருக்கும் குருவித்தீன் தான்டா" என்றதும் பையன் "ஓ Love birds க்கு போடும் சாப்பாடா? என்றான் எமக்கு தூக்கிவாரிப்போட்டது.

சரி டாக்டரிடம் சளிக்கு மருந்து எடுக்கலாம் என்று போனோம். (தனியார் மருத்துவமனை) scan பண்ணவேண்டும் என்றார்கள். பணம் 15 ஆயிரம் கட்டி scan எடுத்தாயிற்று. சில மருந்துகளையும் எழுதி தந்தாயிற்று. Scan முடிவு சொல்ல அடுத்தநாள் வரும்படி சொன்னார்கள். அடுத்தநாள் சென்றபோது 5 ஆயிரம் பணம் செலுத்தினால் தான் மறுமொழி சொல்வார்களாம்.

இது என்ன அநியாயம்? இது போலத்தான் சலரோக, கொழுப்பு நோயாளிகள் இரத்தப் பரிசோதனைக்காகப் பணம் செலுத்தி இரத்தம் கொடுத்துவிட்டு அவர்கள் குறிப்பிட்ட நாளில் போய் காத்திருப்பார்கள். டாக்டர் வரவில்லை என்று திரும்ப ஒரு திகதி கொடுப்பார்கள் அதுவும் அப்படியே சொல்லி அனுப்பிவிடுவார்கள். இப்படியே இரண்டு மாதங்கள் கூட செல்லும். அதற்குள் நோயாளிக்கு இரத்தத்தில் நிச்சயம் மாற்றம் ஏற்பட்டுவிடும்.

ஊரில் உள்ள எங்கள் உறவுகளின் நிலமையை நினைத்துப் பாருங்கள். அடுத்து ஒரு சம்பவம். குறிப்பிட்ட நாளில் ஒரு வட்டாரத்தில் ஆடு மாடுகளுக்கு ஊசி போடுவதாக கால்நடை இலாகா ஒலிபெருக்கியில் அறிவிப்பு செய்தது. அறிவித்தது போல் வந்தார்கள் ஒரே ஊசியில் பட்டியில் நின்ற அத்தனை பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் ஊசி ஏற்றினார்கள். கையெழுத்து வைக்கும்படி ஒரு படிவத்தை நீட்டினார்கள் சென்றுவிட்டார்கள். அதே நாளில் அவர்கள் அந்த வட்டார மருந்தகத்துக்கு மிகுதி மருந்தை விற்றுப் பணமாக்குவதையும் அந்த அப்பாவி மக்கள் அறிவார்கள். வேலியே பயிரை மேயும்போது... பாவிகள் யாரிடம் போய் சொல்லி அழுவார்கள்.

அது இப்படி இருக்க, வவுனியா போவதற்காக நாம் யாழ் டிப்போவடியில் யாழ்ப்பாண பஸ் வண்டிக்காகக் காத்து நின்றோம். எம்முடன் பலர் காத்திருந்தார்கள். சில நிமிடத்தில் அங்கு வந்த முச்சக்கரவண்டியை நிறுத்தி ஒரு குடும்பம் சென்றுவிட்டார்கள். அதேபோல் மற்றையவரும் ஒரு முச்சக்கரவண்டியை நிறுத்தி யாழ்போக எவ்வளவு பணம்? என்று கேட்டார். முன்னூறு என்று பதில் வந்தது. அவர்களும் ஏறிச் சென்று விட்டார்கள். நான் என் கணவரின் முகத்தைப் பார்த்தேன். இதோ பஸ் வந்துவிடும் என்றார். கடைசியாக நின்றவர் கூறினார் இவங்கள் இப்படித்தான் இனி ஒருமணித்தியாலத்துக்குப் பிறகுதான் வரும் என்று கூறியவர் அடுத்து வந்த முச்சக்கர வண்டியில் ஏறி சென்றுவிட்டார். நான் கடுப்புடன் கணவரிடம் இந்த 300 ரூபா யேர்மன் காசில் எவ்வளவு வரும் என்று கேட்டேன்.

அதே நேரம் பஸ் ஒன்று மிகக்குறைந்த பயணிகளுடன் வந்தது. நாம் அதில் ஏறி 20 ரூபா ரிக்கர் பெற்று யாழ் சென்றோம். அங்கு வவுனியா பஸ் புறப்பட ஆயத்தமாக நின்றது. அதில் எம்முடன் டிப்போவடியில் காத்திருந்தவரும் இருந்தார். வவுனியாவுக்கு 180 ரூபா ரிக்கர் எடுத்தோம். 200 ரூபாவுடன் போகவேண்டிய பயணத்தை அந்த நபர் 480ரூபா செலுத்திச் சென்றமை எமக்கு வியப்பாக இருந்தது. அதுமட்டு மல்ல எமக்குப் பக்கத்திலிருந்த பெண் 200 ரூபா கொடுத்து வவுனியாவுக்கு போக வேண்டும் என்றார்.

நடத்துனர் ரிக்கர் கொடுத்த பின் சில்லறை தேடி 20 ரூபாவை நீட்டிய போது அப்பெண் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

இதே பெண் முருகண்டியில் உணவுக்காக பிச்சை எடுத்தவரை பார்த்து கை கால் இருக்கிறது தானே உழைத்து சாப்பிடு என்றார். இவையெல்லாம் எனக்கு வியப்பை மட்டுமல்ல வெறுப்பையும் தந்தது. எப்படி இப்படியெல்லாம் இவர்கள் மாறினார்கள். இப்போ எங்குபார்த்தாலும் லஞ்சமும் பகற்கொள்ளையும் தான்.

நேயம் வளர்த்து நேசிப்புடன் வாழ்ந்த மக்கள், இன்று நேயத்தைத் தொலைத்து நேசிப்பில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையாகும். கடவுளுக்குத்தான் வெளிச்சம். இவை மட்டுமல்ல..... இன்னும் அடுத்த இதழில்

தொடரும்.........



## சிறுவர் உலகம் இனி இப்படித்தான்!.......

இன்றைய உலகம் கணனி, விஞ்ஞானம், தொழில் நுட்பங்களில் அதி உச்ச வளர்ச்சி கண்டுவருகின்றது. சிறுவர் உலகமும் இப்படியான நிலைக்கு மாறிவிட்டது. இந்த வளர்ச்சிகள் உச்சத்துக்குச் சென்றாலும் இவைகளால் உடலாரோக்கியம் பாதிக்கும் என்பது உறுதியான விடையமாகும். நாணயதத்துக்கு இரு பக்கம் இருப்பதுபோல நன்மையைவிடத் தீமைகளே அதிகம் என்பது உறுதியாகும்....

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-164
(ஆடி, ஆவணி- 2018)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 2 | 3 | 5 | 4 | 7 | 1 |
| 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 2 | 5 | 3 |
| 3 | 5 | 2 | 4 | 1 | 7 | 9 | 6 | 8 |
| 9 | 4 | 7 | 6 | 5 | 3 | 8 | 1 | 2 |
| 6 | 1 | 8 | 7 | 4 | 2 | 3 | 9 | 5 |
| 5 | 2 | 3 | 1 | 8 | 9 | 7 | 4 | 6 |
| 7 | 6 | 9 | 3 | 2 | 1 | 5 | 8 | 4 |
| 4 | 3 | 1 | 5 | 7 | 8 | 6 | 2 | 9 |
| 2 | 8 | 5 | 9 | 6 | 4 | 1 | 3 | 7 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 101
(ஆடி + ஆவணி - 2018)

| | | | |
|---|---|---|---|
| வி | டு | மு | றை |
| ர | ட் | த் | பி |
| ல் | ப | து | ட் |
| ம் | க | கா | டு |

# சுடுக்கோ போட்டி முடிவுகள் - 12
(ஆடி + ஆவணி - 2018)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | று | ப் | பு | யூ | லை | பா |
| ய | ய | னி | த் | லி | ல் | வி |
| டி | ப | ன் | தூ | ய | ப | த |
| சை | ரி | வ | ர் | சீ | ப் | பு |
| ப | ட் | ட | ம் | ச | க | தா |
| ற் | பு | த் | த | ர் | ல் | ர |
| ப | டி | ட் | ம | ன் | ன | ன் |




## FIFA Football World Cup
## உலககிண்ண உதைபந்தாட்டப்போட்டி-2018

## வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது பிரான்ஸ்!......

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இம்முறை ரஷ்ஷியாவின் 12 நகரங்களில் நடைபெறது. இப்போட்டியானது 21வது போட்டியாகும். இறுதியாக 2014ம் ஆண்டில் பிறேசிலில் நடைபெற்றது. இதில் யேர்மனி இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. 2018 ஆண்டுக்குரிய கிண்ணத்தைப் பிரான்ஸ் நாடு பெற்றுக்கொண்டது இப்போட்டி பற்றிய சிறுகுறிப்பை இங்கே காணலாம்.

(1)-14-06-2018 தொடக்கம் 15-07-2018 வரையிலான ஒருமாதகாலம் இப்போட்டி நடைபெற்றது.

(2)-5 கண்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 32 நாடுகள் இதில் பங்குகொண்டன. -ஐரோப்பாவிலிருந்து - 14 நாடுகள்

-ஆசியா அவுஸ்திரேலியா நாடுகளிலிருந்து - 05 "

| | | |
|---|---|---|
| -ஆபிரிக்கா கண்ட நாடுகளிலிருந்து | - 5 | நாடுகள் |
| -மத்திய வட அமெரிக்க நாடுகளிலிருந்து | - 3 | " |
| -தென்னமெரிக்க நாடுகளிலிருந்து | - 5 | " |
| மொத்தம் | - 32 | " |

(3)-மொத்தம் 12 நகரங்களில் போட்டிகள் நடைபெற்றது. தலைநகர் மொஸ்கோவில்தான் முதல் போட்டியும் இறுதிப்போட்டியும் இடம்பெற்றது.இந்த விளையாட்டரங்குதான் மிகப்பெரியதாகும் இங்கு 81.000 பேர் கண்டுகளிக்கக்கூடியதாகும்.

(4) மொத்தம் 32 நாடுகளையும் 8 குறாப்பாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு குழவிலும் 4 நாடுகள் தெரிவுப்போட்டியில் கலந்து கொண்டன.

(5) மொத்தமாக 400 மில்லியன் US டொலர்கள் பரிசுப்பணமாக வழங்கப்பட்டது..வெற்றிபெற்ற நாட்டுக்கான...

| | | | |
|---|---|---|---|
| 1வது பரிசு | - 38 | மில்லியன் | டொலர் |
| 2வது " | - 28 | " | " |
| 3வது " | - 24 | " | " |
| 4வது " | - 22 | " | " |
| 5 தொடக்கம் 8வரை(4x16) | - 64 | " | " |
| 9 தொடக்கம் 16வரை(8x12) | - 96 | " | " |
| 17 தொடக்கம் 32வரை(16X8) | - 128 | " | " |

(6) 1930ம் ஆண்டுதான் முறைப்படி இந்த உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. 80 வருடங்களைக் காணும் இதன் முதலாவது போட்டி உருகுவே நாட்டில்தான் நடைபெற்றது. உருகுவே நாடுதான் முதலாவது உலகக் கிண்ணத்தைப் பெற்றது. இறுதியாக 2014ல் பிறேசிலில் நடைபெற்ற போட்டியில் யோர்மனி வெற்றி பெற்றது. 2018 தற்போது நாட்டு அணி வெற்றிபெற்றது. அடுத்த போட்டி 2022 ல் அரபு நாடான கட்டார் நாட்டில் நடைபெறும்.

(7) ஆகக்கூடுதலாக இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற நாடுகள்..
பிறேசில் - 5 தடவைகள்
யோர்மனி - 4 "
இத்தாலி- 4 "
(8) உதைபந்தாட்டத்தில் பெரிய ஜாம்பவானாகத் திகழ்ந்த இத்தாலி தெரிவுப் போட்டியில் தகுதி இழந்து இம்முறை தெரிவுசெய்யப்படவில்லை.

(9) 60 ஆண்டுகளில் முதல் முறையாக உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கு தகுதி பெறாத இத்தாலி 1958ம் ஆண்டுக்கு பிறகு இத்தாலி அணி உலக கோப்பை போட்டிக்கு தகுதி பெறாமல் போனது இதுவே முதல்முறையாகும். 60 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பை போட்டியில் விளையாடும் வாய்ப்பை பறிகொடுத்து இருக்கிறது.

(10) இதுவரை நடைபெற்ற போட்டிகளின் விபரம்...

| ஆண்டு | நடைபெற்றநாடு | வெற்றிபெற்றநாடு |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | பிரான்ஸ் | இத்தாலி |
| 1942 | 2 வது உலகப்போர் | .................. |
| 1946 | நடைபெறவில்லை | .................. |
| 1950 | பிறேசில் | உருகுவே |
| 1954 | சுவீஸ்லாந்து | யேர்மனி |
| 1958 | சுவீடன் | பிறேசில் |
| 1962 | சில்லே | பிறேசில் |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | மெக்ஸிக்கோ | பிறேசில் |
| 1974 | யேர்மனி | யேர்மனி |
| 1978 | ஆஜர்ன்தீனா | ஆஜர்ன்தீனா |
| 1982 | ஸ்பெயின் | இத்தாலி |
| 1986 | மெக்ஸிக்கோ | ஆஜர்ன்தீனா |
| 1990 | இத்தாலி | யேர்மனி |
| 1994 | அமெரிக்கா | பிறேசில் |
| 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் |
| 2002 | தெ.கொரியா +யப்பான் | பிறேசில் |
| 2006 | யேர்மனி | இத்தாலி |
| 2010 | தென்னாபிரிக்கா | ஸ்பெயின் |
| 2014 | பிறேசில் | யேர்மனி |
| 2018 | ரஷ்ஷியா | ?............ |
| 2022 | கட்டார் | ?........... |

(11)சுமார் 100 வருட வரலாற்றின் 2018 போட்டியில் உலக ஜாம்பவனாகிய யேர்மனி தெரிவுச் சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்து முதல் சுற்றுடன் வெளியேறியது உலக உதைபந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியது.

## WorldCup 2018. Final

| | | | |
|---|---|---|---|
| **France** | 4:2 | Croatia | 15.07.18 |

## WorldCup 2018. Third place play-off

| | | | |
|---|---|---|---|
| **Belgium** | 2:0 | England | 14.07.18 |

## WorldCup 2018. Semi-finals

| | | | |
|---|---|---|---|
| **France** | 1:0 | Belgium | 10.07.18 |
| **Croatia** | 2:1 | England | 11.07.18 |

## WorldCup 2018. Quarter-finals

| | | | |
|---|---|---|---|
| Uruguay | 0:2 | **France** | 06.07.18 |
| Brazil | 1:2 | **Belgium** | 06.07.18 |
| Sweden | 0:2 | **England** | 07.07.18 |
| Russia | 2:2 (3:4) | **Croatia** | 07.07.18 |

## WorldCup 2018. Round of 16

| | | | |
|---|---|---|---|
| **France** | 4:3 | Argentina | 30.06.18 |
| **Uruguay** | 2:1 | Portugal | 30.06.18 |
| Spain | 1:1 (3:4) | **Russia** | 01.07.18 |
| **Croatia** | 1:1 (3:2) | Denmark | 01.07.18 |
| **Brazil** | 2:0 | Mexico | 02.07.18 |
| **Belgium** | 3:2 | Japan | 02.07.18 |
| **Sweden** | 1:0 | Switzerland | 03.07.18 |
| Colombia | 1:1 (3:4) | **England** | 03.07.18 |

# உதைபந்தாட்டம் - FIFA 2018

## WorldCup 2018. Group A

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Uruguay | 3 | 3 | 0 | 0 | 5 | - | 0 | 9 |
| 2. Russia | 3 | 2 | 0 | 1 | 8 | - | 4 | 6 |
| 3. Saudi Arabia | 3 | 1 | 0 | 2 | 2 | - | 7 | 3 |
| 4. Egypt | 3 | 0 | 0 | 3 | 2 | - | 6 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Russia | 5:0 | Saudi Arabia | 14.06.18 |
| Egypt | 0:1 | Uruguay | 15.06.18 |
| Russia | 3:1 | Egypt | 18.06.18 |
| Uruguay | 1:0 | Saudi Arabia | 20.06.18 |
| Uruguay | 3:0 | Russia | 25.06.18 |
| Saudi Arabia | 2:1 | Egypt | 25.06.18 |

## WorldCup 2018. Group B

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Spain | 3 | 1 | 2 | 0 | 6 | - | 5 | 5 |
| 2. Portugal | 3 | 1 | 2 | 0 | 5 | - | 4 | 5 |
| 3. Iran | 3 | 1 | 1 | 1 | 2 | - | 2 | 4 |
| 4. Morocco | 3 | 0 | 1 | 2 | 2 | - | 4 | 1 |

| | | | |
|---|---|---|---|
| Morocco | 0:1 | Iran | 15.06.18 |
| Portugal | 3:3 | Spain | 15.06.18 |
| Portugal | 1:0 | Morocco | 20.06.18 |
| Iran | 0:1 | Spain | 20.06.18 |
| Iran | 1:1 | Portugal | 25.06.18 |
| Spain | 2:2 | Morocco | 25.06.18 |

## WorldCup 2018. Group E

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Brazil | 3 | 2 | 1 | 0 | 5 | - | 1 | 7 |
| 2. Switzerland | 3 | 1 | 2 | 0 | 5 | - | 4 | 5 |
| 3. Serbia | 3 | 1 | 0 | 2 | 2 | - | 4 | 3 |
| 4. Costa Rica | 3 | 0 | 1 | 2 | 2 | - | 5 | 1 |

| | | | |
|---|---|---|---|
| Costa Rica | 0:1 | Serbia | 17.06.18 |
| Brazil | 1:1 | Switzerland | 17.06.18 |
| Brazil | 2:0 | Costa Rica | 22.06.18 |
| Serbia | 1:2 | Switzerland | 22.06.18 |
| Serbia | 0:2 | Brazil | 27.06.18 |
| Switzerland | 2:2 | Costa Rica | 27.06.18 |

## WorldCup 2018. Group F

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Sweden | 3 | 2 | 0 | 1 | 5 | - | 2 | 6 |
| 2. Mexico | 3 | 2 | 0 | 1 | 3 | - | 4 | 6 |
| 3. South Korea | 3 | 1 | 0 | 2 | 3 | - | 3 | 3 |
| 4. Germany | 3 | 1 | 0 | 2 | 2 | - | 4 | 3 |

| | | | |
|---|---|---|---|
| Germany | 0:1 | Mexico | 17.06.18 |
| Sweden | 1:0 | South Korea | 18.06.18 |
| South Korea | 1:2 | Mexico | 23.06.18 |
| Germany | 2:1 | Sweden | 23.06.18 |
| South Korea | 2:0 | Germany | 27.06.18 |
| Mexico | 0:3 | Sweden | 27.06.18 |

## WorldCup 2018. Group C

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. France | 3 | 2 | 1 | 0 | 3 | - | 1 | 7 |
| 2. Denmark | 3 | 1 | 2 | 0 | 2 | - | 1 | 5 |
| 3. Peru | 3 | 1 | 0 | 2 | 2 | - | 2 | 3 |
| 4. Australia | 3 | 0 | 1 | 2 | 2 | - | 5 | 1 |

| | | | |
|---|---|---|---|
| France | 2:1 | Australia | 16.06.18 |
| Peru | 0:1 | Denmark | 16.06.18 |
| Denmark | 1:1 | Australia | 21.06.18 |
| France | 1:0 | Peru | 21.06.18 |
| Denmark | 0:0 | France | 26.06.18 |
| Australia | 0:2 | Peru | 26.06.18 |

## WorldCup 2018. Group D

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Croatia | 3 | 3 | 0 | 0 | 7 | - | 1 | 9 |
| 2. Argentina | 3 | 1 | 1 | 1 | 3 | - | 5 | 4 |
| 3. Nigeria | 3 | 1 | 0 | 2 | 3 | - | 4 | 3 |
| 4. Iceland | 3 | 0 | 1 | 2 | 2 | - | 5 | 1 |

| | | | |
|---|---|---|---|
| Argentina | 1:1 | Iceland | 16.06.18 |
| Croatia | 2:0 | Nigeria | 16.06.18 |
| Argentina | 0:3 | Croatia | 21.06.18 |
| Nigeria | 2:0 | Iceland | 22.06.18 |
| Nigeria | 1:2 | Argentina | 26.06.18 |
| Iceland | 1:2 | Croatia | 26.06.18 |

## WorldCup 2018. Group G

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Belgium | 3 | 3 | 0 | 0 | 9 | - | 2 | 9 |
| 2. England | 3 | 2 | 0 | 1 | 8 | - | 3 | 6 |
| 3. Tunisia | 3 | 1 | 0 | 2 | 5 | - | 8 | 3 |
| 4. Panama | 3 | 0 | 0 | 3 | 2 | - | 11 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Belgium | 3:0 | Panama | 18.06.18 |
| Tunisia | 1:2 | England | 18.06.18 |
| Belgium | 5:2 | Tunisia | 23.06.18 |
| England | 6:1 | Panama | 24.06.18 |
| England | 0:1 | Belgium | 28.06.18 |
| Panama | 1:2 | Tunisia | 28.06.18 |

## WorldCup 2018. Group H

| | P | W | D | L | F | - | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Colombia | 3 | 2 | 0 | 1 | 5 | - | 2 | 6 |
| 2. Japan | 3 | 1 | 1 | 1 | 4 | - | 4 | 4 |
| 3. Senegal | 3 | 1 | 1 | 1 | 4 | - | 4 | 4 |
| 4. Poland | 3 | 1 | 0 | 2 | 2 | - | 5 | 3 |

| | | | |
|---|---|---|---|
| Colombia | 1:2 | Japan | 19.06.18 |
| Poland | 1:2 | Senegal | 19.06.18 |
| Japan | 2:2 | Senegal | 24.06.18 |
| Poland | 0:3 | Colombia | 24.06.18 |
| Japan | 0:1 | Poland | 28.06.18 |
| Senegal | 0:1 | Colombia | 28.06.18 |

# பச்சிளம் பாலகி றெஜினாவுக்கு நீதி கோரி வீதி மறிப்புப் போராட்டம்......

சுழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதிகோரி, அந்தப் பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் பிரதான வீதியை மறித்து 28-06-2018 காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேல் மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்கின்ற போதும், சம்பவ இடத்துக்கு அரசியல்வாதிகள் எவரும் வருகை தரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை சென்ற சுழிபுரத்தைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுமி றெஜீனா, கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரது கழுத்தில் கீறல் காயங்கள் இருந்தமையால் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்கள் அறுவரைக் கைது செய்தனர். அவர்களில் ஐவரை பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவி றெஜினாவிற்கு நீதிகோரி,யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர். பல்கலைக்கழக வளவில் ஒன்று கூடிய ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கண்டனப் போராட்டத்தில் குதித்தனர். அத்துடன் வளாகத்திற்கு வெளியே வந்து பலாலி வீதியை பரமேஸ்வரா சந்தியில் வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக அந்தப் பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இந்நிலையிலேயே யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்திருந்தனர். இதனால் பரமேஸ்வரா சந்திப்பகுதியினூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டு போயிருந்தது. காலை வேளை சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் மக்கள் சுழிபுரம் பகுதியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர்.

பாடசாலை சென்ற சுழிபுரத்தைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுமி றெஜீனா, கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்த நிலையில் கொலையாளிகள் போதைபொருள் அடிமையாளர்களென சொல்லப்படுகின்றது.இந்நிலையிலேயே பாடசாலை சிறுமியின் உயிரை பாதுகாக்க முடியாத அரசும் அதனது காவல்துறை மீதும் அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ் அரசியல் வாதிகள் மீதும் மக்கள் கோபமுற்றுள்ளனர்.

# சவூதியில் முதல்முறை பெண்களுக்கு ஓட்டுநர் அனுமதி பத்திரம் விநியோகம்



பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு சவூதி அரேபியா பெண்களுக்கு வாகனம் ஓட்ட அனுமதிப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பித்துள்ளது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் சவூதி பெண்களின் அனுமதிப்பத்திரங்களை மாற்றும் செயல்முறை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அந்நாட்டு பொது போக்குவரத்து இயக்குனரகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பத்து பெண்கள் தங்களது சர்வதேச ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை உள்நாட்டு அனுமதிப்பத்திரத்திற்கு மாற்றிக்கொண்டதாக சவூதி அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த பரிமாற்ற செயல்முறை நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஜூன் 24 ஆம் திகதி பெண்கள் வீதிகளில் வாகனத்தை செலுத்துவதற்கு வழி ஏற்படுத்துவதாக இது அமைந்துள்ளது என்று சவூதியின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. சுமார் 2,000 பெண்களுக்கு வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் வழங்க எதிர்பார்த்திருப்பதாக தகவல்தொடர்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளாகப் பெண்கள் கார் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடையமாகும்.

# இலங்கையில் வெள்ளை உடைக்குள் கரையும் பருவம் என்னும் நூல் வெளியீட்டுரை......




விரைந்து செல்லும் பொழுதுகளில் விடியலைத் தேடும் மனிதர்கள் மத்தியில் எனக்காகவும் இன்றைய பொழுது புலர்ந்திருக்கின்றது. இன்றைய பொழுதிலே இச்சிறுகதை நூல் வெளியீட்டு விழாவினைச் சிறப்பிப்பதற்காக வருகை தந்திருக்கின்ற பிரதம விருந்தினர்கள் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கும், பேராசிரியர் ம.ரகுநாதன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்கள் கலாகீர்த்தி உடுவை எஸ். தில்லைநடராசா அவர்களுக்கும் தினக்குரல் பிரதம ஆசிரியர் பாரதி அவர்களுக்கும் ஊற்று வலையுலக கலைஞர்கள் அமைப்பு, யாழ் இலக்கியக்குவியம் உறுப்பினர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், வாசக நெஞ்சங்களுக்கும், உறவினர் நண்பர்களுக்கும் அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எண்ணங்களுக்கு வலிமையுண்டு என்று வலுவாக நம்புபவள் நான். இது நடக்க வேண்டும் என்று மனதுக்குள் ஆழமாகப் பதியமிட்டுவிட்டோம் என்றால் அது நிச்சயம் நடக்கும். மூளையிடம் தவமிருந்தால், நிச்சயம் வரம் கிடைக்கும். என்னுடைய அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய ஆசிரியர் பேராசிரியர் துரைமனோகரன் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாட்களின் தவம் என்னுடைய நூலுக்கு அவரை அணிந்துரை எழுத வைத்துள்ளது. அவரின் முன்னிலையில் இந்த நூல் வெளியிடப்பட வேண்டும் என்று ஜேர்மனியில் இருந்து ஆசைப்பட்டேன். அக்கனவை நனவாக்கித் தந்தார் யாழ்பாவணன் அவர்கள். துரைமனோகரன் சேரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினார். ஒரு மாணவிக்கு இதைவிடப் பெறும் பேறு கிடைக்கப் போவதில்லை என்று கருதுகின்றேன்.

வாழ்க்கைச் சூழல் பல பாடங்களை எமக்குக் கற்றுத் தருகின்றது. சிந்திக்கத் தெரிந்த மனிதன் இது சரியா பிழையா என மூளைக்குள் போட்டு பழுது பார்ப்பான். பிழையெனப்படுவதை தட்டிவிட்டுப் போகும் மூடப்பிறவிகளாக நாம் வாழக்கூடாது. சரியெனப்படுவதை சொல்லத் தயங்கும் கோழைகளாகவும் நாம் வாழக்கூடாது. அனைவருக்கும் இலகுவில் வசப்படக்கூடிய இலக்கியம் சிறுகதை இலக்கியம். இதன் மூலம் தெளிந்த நீரோடைபோல் மனிதன் உலகில் வாழ எம்மால் இயன்ற அருமருந்துகளைத் தந்துவிட்டுப் போகவேண்டிய கடமை ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்றது. அக்கடமையைச் செய்ய சரியான வழி எது என தீர்மானிக்கும் போது குறுகச்சொல்லி விளங்க வைக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது.

இது காலத்தின் கட்டாயமும் கூட. அதிகம் எழுதாதீர்கள் என்னும் கட்டளையை உள்வாங்கியே என் சிறுகதைகள் சிறிய கதைகளாக படைக்கப்பட்டன. கதை எழுதி கதாசிரியர் என்னும் பெயர் பெற வேண்டும் என்னும் நோக்கம் சிறிதளவு கூட என்னிடத்தில் இருந்ததில்லை. ஆனால், எதையும் ஏற்றுக் கொண்டு போகும் பாவியாகவும் நான் இருப்பதற்கு நான் தயாராகவில்லை. எழுது எழுது என்று என் மூளையிட்ட கட்டளையை உள்வாங்கியே இன்று உங்கள் கைகளில் என் நூல் வந்து அமரப் போகின்றது. இனிமேல் இந்த நூலுக்குச் சொந்தக்காரி நான் அல்ல. நீங்கள் ஒவ்வொருவருமே அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டியவர்கள் நீங்கள் என்று கூறிஇந்த நூல் இந்த அளவில் நூலாக உருப்பெற்று உங்கள் கைகளுக்கு வந்திருக்கின்றது என்றால், அதில் அடங்கியிருக்கின்ற பாரிய

வேலைப்பழு சொல்லித் தீராது. ஆனால், அத்தனை பொறுப்புக்களையும் தன் தலைமேல் கொண்டு கடினத்தையும் இலகுவாகக் காட்டி என் கருத்துக்களையும் உள்வாங்கி இந்நூல் வெளிவரவும் வெளியீட்டுக்கும் முக்கிய காரணகர்த்தாவாகிய யாழ்பாவணன் ஜீவலிங்கம் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய முக்கோணமுக்குளிப்பு நூலை மலேசியாவில் வெளியீடு செய்து வைத்ததோடு மட்டுமல்லாமல் என்ன உதவியென்றாலும் கேளுங்கள் அக்கா நான் செய்வேன் என்று முழுமூச்சாகத் தமிழுக்கும் கலைகளுக்கும் பெரும் பணியாற்றும் என் உடன் பிறவாச் சகோதரன் இந்நிகழ்வுக்குத் தலைமைதாங்கும் ஊற்றுவலையுலகக் கலைஞர்கள் மன்றத்தலைவர் ரூபன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கல்வியிலும் தரத்திலும் பெருமையிலும் போற்றப்படும் பிரமுகர்கள் புலம்பெயர்ந்து வாழும் எம்முடைய இலக்கிய தாகத்திற்கு மதிப்பளித்து என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என்னுடைய நூல் வெளியீட்டுக்கு வருகை தந்திருப்பது தமிழுக்கும் இலக்கியத்துக்கும் அவர்கள் கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கும், பேராசிரியர் ம.ரகுநாதன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்கள் கலாகீர்த்தி உடுவை எஸ். தில்லைநடராசா அவர்களுக்கும் தினக்குரல் பிரதம ஆசிரியர் பாரதி அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வரவேற்புரை வழங்கிய ரேகா சிவலிங்கம் அவர்களுக்கும், 21ம் நூற்றாண்டில் சிறுகதை என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றிய மூத்த எழுத்தாளர் ஐ. சாந்தன் அவர்களுக்கும், வெளியீட்டுரை வழங்கிய வேலணையூர் தாஸ் அவர்களுக்கும், நான் உலகுக்குச் சொல்ல வந்தது என்ன என்பதை நுண்மான் நுழைபுலம் தேடி ஆய்வுரை ஆற்ற வந்திருக்கின்ற கு.றஜீவன் அவர்களுக்கும் விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் மட்டுமல்லாமல் சிறப்புப் பிரதியைப் பெறுபவர்களுக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எத்தனை தவறுகளை நாம் சுட்டிக்காட்டினாலும் மனம் சோராது எமக்கு ஒத்துழைப்புத்தந்து அழகாக இரண்டாவது தடவையும் இந்நூலை வடிவமைத்துத்தந்த அன்ட்ரா பிரின்ரஸ்க்கும் என் நன்றியை தெரிவிக்கின்றேன். இதைவிட என்னை யாரென்று அறியாமலே இங்கு வருகைதந்து இவ்விழாவைப் பெருவிழாவாக்கிக் கொண்டிருக்கும் தமிழை நேசிக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது உறவினர்களுக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

# யேர்மனியில் நூல்களின் வெளியீடு..

யேர்மனிய எழுத்தாளர்
கீத்தா பரமானந்தன் அவர்களின் சுவடுகள், (சிறுகதை) முகவரி (கவிதை) என்னும்

இரு நூல்கள் வெளியீடு



10.06.2018 அன்று யேர்மனிய எழத்தாளரும் யேர்மனி தமிழ் எழத்தாளர் சங்க உபசெயலாளருமான திருமதி கீத்தா பரமானந்தன் அவர்களுடைய முகவரி என்னும் கவிதை நூலும் சுவடுகள் என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலும் öffentlicher Begegnungstätte Kevelaer, Bury St. Edmund Str , 47623 Kevelaer – Germany என்னும் இடத்தில் ஜேர்மனி தமிழ் எழத்தாளர் சங்க அனுசரணையுடன் மிக விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு ஜேர்மனி எழத்தாளர் சங்கத் தலைவரும் யோர்மனி "மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான திரு வ.சிவராசா அவர்கள் தலைமை வகித்தார். இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து கலாநிதி திருமதி அனுஷியா சத்தியசீலன் (விரிவுரையாளர் கல்வியியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்) வருகை தந்திருந்து உரையாற்றினார்..

சிறப்பு விருந்தினராக கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் (வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர்) வருகை தந்து சிறப்புரையாற்றினார். எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் என மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது.

கலாநிதி அனுஷியா சத்தியசீலன் அவர்களும், எழுத்தாளர் வசந்தா ஜெகதீசன் அவர்களும், சங்கீத ஆசிரியை கலைவாணி ஏகானந்தராஜா அவர்களும் சமூக ஆர்வலர் திருமதி கிரிஜாஅவர்களும் மங்கள விளக்கை ஏற்றினர். கீதா பரமானந்தன் அவர்கள் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்தை சங்கீத ஆசிரியை கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள் பாடினார். செல்வி அபிதா ரமேஸ் வரவேற்பு நடனம் வழங்கினார். தலைமையுரையை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் வ.சிவராஜா அவர்கள் வழங்கினார்.

வரவேற்புரையினை விழா நாயகியின் மகனும் எழுத்தாளருமான செல்வன் ராம் பரமானந்தன் நிகழ்த்தினார். சிறுகதை நூல் அறிமுகத்தினை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க செயலாளரும் எழுத்தாளருமான திரு பொன். புத்திசிகாமணி அவர்களும், சிறுகதை நூல் விமர்சனத்தினை எழுத்தாளரும் ஜேர்மனி தமிழ் எழுத்தாளா சங்க செயற்குழ உறுப்பினருமாகிய திருமதி சந்திரகௌரி சிவபாலன்(கௌசி) அவர்களும் கவிதை நூல் அறிமுகத்தினை ஜேர்மனி எழுத்தாளர் சங்க பொருளாளர் கவிஞர் திரு அம்பலவன் புவனேந்திரன் அவர்களும், கவிதை நூல் விமர்சனத்தினை தமிழர் அரங்க உரிமையாளரும் எழுத்தாளரும் விமர்சகருமான வி.சபேசன் அவர்களும் வழங்கினர்.

யேர்மனியின் நாலாபக்கங்களிலிருந்தும் எழுத்தாளர்கள் நண்பர்கள், தமிழார்வலர்கள், ஊடகவியலாளர்கள் என மண்டபம் நிறைந்த மக்கள் இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்தமை சிறப்பான விடையமாகும். அத்தனைபேருக்கும் இடைவேளையின் போது சிற்றுண்டிகள் குளிர்பாகங்கள் தேநீர் என விருந்தளிக்கப்பட்டது.

திருமதி கீத்தா பரமானந்தன் அவர்கள் எழுத்துத்துறை, தமிழாசிரியர், சமூகசேவை என அவரின் பன்முக ஆளுமைகளைப் பாராட்டி ஜேர்மனி தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு.பொ. சிறீஜீவகன், புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு க.முருகதாசன், யோர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களும்

எழுத்தாளர்களுமான திரு ப.பசுபதிராசா, திருமதி கெங்கா.ஸ்ரான்லி, திருமதி கலைவாணி ஏகானந்தராசா, திருமதி ஜெகதீஸ்வரி.மகேந்திரன் ஆகியோரும் கோவில் . கொம் (Kovil.Com) இணையத்தள நிர்வாகி திரு இராஜகருணா அவர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

அவரின் தமிழ்பணியைப் பாராட்டி யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையினராலும் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினராலும் பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டதுடன் பொன்னாடையும் போர்த்தி மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். மலரும்மாலை மற்றும் இணைய நிர்வாகி திரு க.சிவநேசன் அவர்களும் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துக்கொண்டார்.

நிகழ்ச்சிகள் வரிசையில் பல்கலைக்கழக மாணவியும் தமிழ் எழுத்தாளருமான செல்வி வேதிகா ஜெகதீசன் நடனம் ஆடி அரங்கைச் சிறப்பித்தார். பல்கலைக்கழக மாணவன் செல்வன் ராம் பரமானந்தன், செல்வி அபிராமி பரமானந்தன், செல்விகள் சாதனா பதஞ்சலி, மயூரி பதஞ்சலி ஆகியோர் சங்கீத இசை வழங்கினர்..

இந்த நூல்களின் வெளியீட்டுவிழாவிலே ஒரு சிறப்பான விடையம் என்னவென்றால் நூலாசிரியர் திருமதி கீதா பரமானந்தன் அவர்களின் மகனான ராம் அவர்களின் சில கவிதைகளும் சில சிறுகதைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடையமாகும். அதாவது இங்கு பிறந்து வளர்ந்து யேர்மன் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இவர் தமிழாசியராகவும் கடமைபுரிகின்றார். இதுமட்டுமல்லாமல் இந்த மாணவன் பாடல், நடிப்பு, ஆடல், எழுத்து, சங்கீதம் என தமிழில் பல்துறை ஆளுமைமிக்க மாணவன் என்னும் போது தாயும் மகனும் சேர்ந்து இந்த நூல்களை எழுதி வெளியிட்டு இருப்பது யேர்மனிய வரலாற்றில் இதுவே முதல் பதிவாகும். இது ஒரு சிறப்பான விடையம் எனச் சபையோர் பேசிக்கொண்டதுடன் தமது வாழ்த்துக்களையும் கூறி மகிழ்ந்தனர்.

இந்த விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பை அழகு தமிழில் தனது இனிமையான குரலில் தொகுத்து வழங்கியவர் ஐரோப்பிய தமிழ் வானொலியின் அதிபரும் ஐரோப்பிய "அகரம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான திரு. த.இரவீந்திரன் அவர்களே. ஒவ்வொரு பேச்சாளரையும் அவர்களின் பொதுப்பணிகள், தமிழ்ப்பணிகள்

பற்றி எடுத்துக்கூறிச் சிறப்பித்ததுடன் இடையிடையே தனது கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டார். இவரையும் விழாவில் சொற்பொழிவாற்றிய அத்தனைபேரையும் நூலாசிரியரும் அவரது கணவனாரும் பூச்செண்டுகள் வழங்கிக் கௌரவித்தமையும் இங்கு சிறப்பாக அமைந்தது என்றே கூறவேண்டும். ஒட்டுமொத்தமாக இந்த விழாவின் சிறப்புக்கு அறிவிப்பாளரின் திறமையான செயற்பாடும் காரணமாக அமைந்ததென்றே கூறிக்கொள்ளலாம். அவருக்கும் பாராட்டுக்கள்.

நூல்களின் ஆசிரியர் திருமதி கீதா.பரமானந்தன் அவர்கள் தனது ஏற்புரையில் நூலாக்கத்தில் ஏற்பட்ட சிரமங்களையும் தாயகத்தில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களில் எழுத்துப்பிழைகள் அதிகம் காணப்பட்டதால் அவற்றை திரும்பவும் அச்சுப்பதிவு செய்ய வேண்டிவந்ததையும் வீண் பணச் செலவுகளையும் அச்சுக்கூடக்காரரின் அசமந்தப் போக்கையும் சுட்டிக்காட்டினார். இறுதியில் விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன் தனது கணவனாரின் அளப்பரிய பங்களிப்பு ஒத்துழைப்பால்தான் இந்த இரு நூல்களையும் எழுதி வெளியீடு செய்ததாகவும் அவர்களின் அர்ப்பணிப்பினையும் பாராட்டிப் பேசினார்.

உண்மைதான் இந்தப் பெண்ணின் வெற்றிக்குப் பின் கணவனான ஆண் இருந்துள்ளமை சிறப்பான விடையமாகும். அவர் உண்மையிலே பாராட்டப்படவேண்டியவரே. இறுதில் நன்றியுரையில் நூலாசிரியரின் கணவன் திரு பரமானந்தன் அவர்கள் பல அனுபவக் குறிப்புக்களை இலகுவாகவும் நகைச்சுவையாகவும் எடுத்துக்கூறிச் சபையோரை மகிழ்வில் ஆழ்த்தினார். கீத்தா பரமானந்தன் ஏற்புரை வழங்கி முடிவடைய அவரது மகள் செல்வி அபிராமி பரமானந்தன் அவர்கள் நன்றியுரை வழங்க வெளியீட்டு விழா இனிதே நிறைவு பெற்றது. இந்த வருடம் யேர்மனியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாக்களில் இவ்விழாவானது ஒரு வித்தியாசமான நல்ல விழாவாக அமைந்தது. தமிழ், இலக்கிய ஆர்வலர்களுக்கு இந்த விழா நல்லதோர் விழாவாக அமைந்தது என்று கூறிக்கொள்ளலாம்.



# திருகோணமலை -கன்னியாவின் வெந்நீர் ஊற்றுக்கள்

தமிழ் இந்துக்களின் வரலாற்று சிறப்புப் பெற்ற கன்னியாவின் வெந்நீர் ஊற்றுக்கள் சிங்கள மயமாக்கலின் ஒரு பகுதியாக மாறி வருகின்றன

கன்னியாவின் வெந்நீர் ஊற்றுக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேல் இந்துக்களின் கலாசாரத்தில் ராவணனால் கட்டப்பட்டுள்ளது என்றுள்ளது.
சமீபத்தில் சிங்களத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சிங்கள வரலாற்றில் வெந்நீர் ஊற்றுக்கும் சிங்களத்துக்கு தொடர்பு உள்ளது என்று கதை விடுகின்றார்கள்

தமிழர் இடத்தில் சிங்களவர் வாழ்ந்தார்கள் என்று சரித்திரம் எழுதுவதற்கு,

1. சிங்களத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் முதலில், சிங்களவர்களால் செய்யப்பட்டதெனத் திரிபுபடுத்துவார்கள்.

2. சில நாட்களுக்கு பிறகு சில சிங்கள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வந்து நிலத்தை தோண்டியெடுத்து சிங்கள செய்தித் தாள்களுக்கு படம் எடுத்து அனுப்புவார்கள்.
3. பின்னர் தோண்டிய இடத்தை, சிங்களம் உரிமை கொண்டாடும்.
4. அதன்பின் அந்த இடம் ஒரு சிங்களவர்கள் நிறைந்த இடமாக மாறும்.
5. குடியேறிய சிங்களவர்களை பாதுகாக்க சிங்கள இராணுவம் கொண்டு வரப்படும்.

தமிழ் வரலாற்றுப் பிரதேசத்தை நீக்குவதற்கும் சிங்கள வரலாற்று இடமாக மாற்றுவதற்கும் இது ஒரு சிங்களவர்கள் கையாளும் பொதுவான தந்திரோபாயமாகும்.தமிழ் அறிவுஜீவிகள் மற்றும் அரசியல்வாதிகள் முட்டாள்கள். இந்த நிகழ்வுகள் பல முறை தொடர்ந்து நடக்கின்றன. ஆனால் அவர்கள் அதைப் பற்றி பேசவோ அல்லது அதற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கவோ இல்லை.

ஒவ்வொரு சிங்கள இனப்படுகொலை நிகழ்வுகளுடனும் போராட ஒவ்வொரு அமைப்பு வேண்டும்.ஒவ்வொரு பணிக்கும் நாம் ஒவ்வொரு அமைப்பை உருவாக்க வேண்டும்:
1. சிங்கள குடியேற்றத்தை எதிர்ப்பதற்கு
2. தமிழ் தாயகத்தில் புத்த கோவில்களை நிறுத்துவதற்கு
3. தமிழ் மற்றும் இந்து வரலாற்று இடங்களை பாதுகாக்க
4. இராணுவ ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை விடுவிக்க
5. தமிழ் பொருளாதாரத்தை சிங்கள ராணுவத்திடம் இருந்து பறிப்பதற்கு
6. தெரு பெயர் அல்லது கிராமத்தின் பெயரை மாற்றுதலை நிறுத்துவதற்கு

கன்னியாவின் வெந்நீர்ஊற்றுக்களின் வரலாறு இதுவே:
இலங்கையை ஆண்ட இராவணன் என்கிற மன்னனால், தனது தாயின் கிரியை நிகழ்வுகளுக்காக உருவாக்கபட்ட ஏழு கிணறுகளுமே இதுவாகும் என இராமாயண வரலாறு கூறுகிறது.இந்துக்களால் இறந்தவர்களின் ஆத்ம கிரியைகளுக்குப் புனித இடமாக பயன்படுத்தபடுகின்றது இவ்விடம். இந்த வெந்நீர்ஊற்றுக்களுக்கும் சிங்கள மற்றும் புத்த சமயத்துக்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

தகவல்: – Tamil Diaspora News

# சிரியா நாட்டு யுத்தத்தின் சீரழிவு.......

கடந்த 2011ம் ஆண்டில் ஆரம்பித்த சிரியாநாட்டு உள்நாட்டு யுத்தத்தால் அந்தநாடே சுடுகாடாய் மாறியிருக்கின்றது. பல ஆயிரக்கணக்கானோர் பலியாகியிருக்கிறார்கள். பல லட்சம் பேர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழும்நிலை. இவைமட்டுமல்லாமல் பல்லாயிரம் குடியிருப்புக்கள் அழிந்து, அனைத்தும் நிர்மூலமாகிய நிலையில்தான் சிரியா நாட்டு எஞ்சிய மக்கள் வாழ்கிறார்கள். தீவிரவாதிகளுக்கும் சிரியாநாட்டுப் படைகளுக்குமிடையிலான மோதல்கள் நின்றபாடில்லை. ஐக்கியநாடுகள் சபை, ஐரோப்பிய யூனியன், ஆபிரிக்க யூனியன், அரபுலீக் நாடுகள் எவ்வகையான முடிவுகளை எடுத்தபோதும் போர் ஓய்தபாடில்லை. கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடரும் இப்போருக்கு இதுவரை சமாதான முடிவுகள் எட்டப்படாதபடியால் பேரழிவுகளே தொடர்கதையாகிவிட்டன.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்ஷியாநாடு சிரியாவுக்குப் பலவழிகளில் உதவிகளைப் புரிந்துவர, அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ரஷ்ஷியாமீது குற்றச்சாட்டுக்களைக் கூறி ரஷ்ஷியாவுக்கு எதிராகப் பல வழிகளில் எதிர்ப்பைத் தெரிவித்து இன்று அதனோடு போர் தொடுக்கும் நிலைக்கு வந்துள்ளன. தற்போது அமெரிக்காவும் அதன் நேச நாடுகளின் படைகளும் தமது கடற்படை மற்றும் போர்ப்படைகளை சிரியா நாட்டுக்கு அண்மையிலுள்ள நாடுகளில் தமது படைகளை நிலைகொள்ள வைத்திருக்கின்றன. சிரியாமீதும் ரஷ்ஷியப் படைகள் மீதும் போர் தொடுக்கும் நடவடிக்கைகளைச் செய்துவருவதை அவதானிக்கக்கூடியதா இருக்கின்றது. போர் வெடிக்கும் அபாயமும் தோன்றியுள்ளது.

உலகப் பொலிஸ்காரனாகிய அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்குப் பல நாடுகள் அடிபணிந்து அதன் பின்னால் திரண்டுள்ளன. இதே நேரம் ரஷ்ஷியாவுடனும் சில நாடுகள் கைகோர்த்து அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் கண்டித்து வருவதுடன் ரஷ்ஷியா விற்கும் சிரியாவிற்கும் உதவிகளை வழங்கி வருகின்றன. இந்த நிலமை மேலும் மோசமடையுமானால் அமெரிக்கா - ரஷ்ஷியா போர் வெடிக்கலாம். அந்த அளவிற்கு யுத்தமேகங்கள் சூழ்ந்துள்ளன.

இன்னொரு கண்டத்திலுள்ள அமெரிக்காவுக்கு சிரியாமீது அவ்வளவு அக்கறை ஏன்?... ஏற்கனவே ஈராக்மீதும் ஆப்கானிஸ்தான் மீதும் படைநடவடிக்கைகளை நடத்தி, இன்றுவரை அந்த நாடுகளை ஆக்கிரமித்துக்கொண்டே இருக்கின்றது. தனது வல்லாதிக்கத்தையும் ஆளுமையையும் நிலைநாட்டி இந்த நாடுகளின் வளங்களையும் சுரண்டும் நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றது.

இன்று சிரியாவை நோக்கினால் அதிபர் அசாத்தின் படைகள், ரஷ்ஷியப்படைகள், ஐ.எஸ் தீவிரவாதிகளின் படைகள், குர்திஸ்தான் விடுதலைப்படைகள், இஸ்லாமிய தீவிரவாதப்படைகள், துருக்கி நாட்டுப்படைகள் என இந்த நாட்டை சுற்றிவர நிலைகொள்ளுகையில் அமெரிக்கா, பிரென்சுப்படைகளும் கடற்பிரதேசங்களை நோக்கித் தமது படைகளை நகர்த்தியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலை மோசமடையுமானால் பெரும் போரும் அழிவுகளும் மனித அழிவுகளும் நேரிடலாம் என அவதானிகள் கருதுகின்றனர். தற்போதுள்ள படைப்பலத்தைக் கவனித்தால்....

| நாடு | - பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கிய தொகை | | | - ஆயுதப்படைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| ஐரோப்பிய யூனியன் | 284 | பில்லியன் | டொலர் | 17.00.000 | பேர் |
| அமெரிக்கா | 611 | " | " | 10.30.000 | " |
| இஸ்ரேல் | 18.5 | " | " | 1.76.000 | " |
| ரஷ்ஷியா | 69.2 | " | " | 10.13.000 | " |
| ஈரான் | 16 | " | | 5.23.000 | " |
| துருக்கி | 08 | " | | 3.55.800 | " |
| சவுதிஅரேபியா | 76.7 | " | | 2.27.000 | " |

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச் செலவுகளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-கிளிசொச்சி - 480-00

03. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

04. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா -480-00

05. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா - 480-00

06. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

07. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

08. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிநொச்சி - 480-00
09.செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு -240-00
10. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00
11. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 01-05-2018 - 421-66

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. செல்விகள் வினிஷா.ராஜ்குமார், தீபா.தர்மராசா-Bleiskastal + 60-00
ஒரு பிள்ளையின் கல்விச் செலவுக்கான அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

09. திரு கிறிஸ்ரி அமலதாஸ் - London + 150-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு) --------

+ 1131-66

\+ 1131-66

அனுப்பியது:-

(1)ரூத் மிஷன் (சிறுவர் காப்பகம்) கிளிநொச்சி - 500-00
(2)சிறீ அகிலாண்டேஸ்வரி அருளகம் வவுனியா -500-00
வங்கிக் கட்டணம் 2x35-00 - 70-00

--------

-1070-00

வங்கிவரி 01.05.2018 - 31.05.2018 - 10-30
01.06.2018 - 30.06.2018 - 9-76 - 20-06

--------


-1090-06 - 1090-06

--------

30-06-2018 மீதி கையிருப்பு - 41-60

---------

---------


Sri Shanmuga Girls' Home

No. 687

54, Vidyalayam Road,
Trincomalee. Sri Lanka.

Date: 6.05.2019

Received with thanks From Mr. R. V. Sivarajah.
Germany

the sum of Rupees [illegible]

on account of donation for Home/ Celebration / Building fund by Cash / Cheque

Rs: 89,646=32

Manageress

ௐ

# SRI SHANMUGA GIRLS' HOME

# ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

76 (54), Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.
026-2222521

Regd No. NEP/PCC/C.H/31/(1998.05.18)

76 (54), வித்தியாலயம் வீதி,
திருகோணமலை
இலங்கை.
026-2222521

திகதி
Date: 21.05.2018

திரு. வ. சிவராசா
பிரதம ஆசிரியர்,
'மண்' கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை
ஜேர்மனி

அன்புடையீர்,

<u>480.00 யூரோ</u>

தங்கள் 04.05.2018 ம் திகதி [illegible] கடிதம் கிடைத்தது. நன்றி. தங்கள் 87,646.52 [illegible] இல்லப் பிள்ளைகள் [illegible] 23 பிள்ளைகள் [illegible].

[illegible]

[illegible] G.C.E (O/L) [illegible] G.C.E (A/L) [illegible].

[illegible] பிள்ளைகள் 05 பேர் [illegible]. [illegible] க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 02 பேர் [illegible] 02 பேர் [illegible] 3'A" [illegible].

[illegible] க.பொ.த உயர்தர பரீட்சையில் [illegible]

01. [illegible]
வயது 19, [illegible]
[illegible]
[illegible]
[illegible] 03 [illegible].

# SRI SHANMUGA GIRLS' HOME
## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

76(54), Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.
026-2222521

Regd.No. NEP/PCC/C.H/31(1998.05.16)

76 (54), வித்தியாலயம் வீதி,
திருகோணமலை,
இலங்கை.
026-2222521

திகதி
Date : [illegible]

02. செல்வி · [illegible]

15 வயது. [illegible]

03. செல்வி · [illegible]

12 வயது, 7ம் ஆண்டில் கல்வி கற்று வருகின்றார். [illegible]

04. செல்வி · [illegible]

[illegible] (A/L). [illegible]

[illegible]

[illegible]

[illegible]

இவ்வண்ணம் - நன்றி

[illegible]

Miss.S.Chithiravel
Attorney-at-Law
Trustee

Miss.V.Nadarajah B.Sc
Manageress & Custodian Trustee.

# தாயகச் செய்திகள் சில...

1- சர்வதேச பத்திரிகை சுதந்திர தரவரிசைப் பட்டியலில் இலங்கை பத்து இடங்கள் முன்னேறி 131 ஆவது இடத்தில் உள்ளது. உலகின் 180 நாடுகளில் காணப்படும் பத்திரிகை சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து எல்லைகள் அற்ற செய்தியாளர் அமைப்பு (Reporters Without Borders –RSF) இந்த தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தரவரிசை பட்டியலின் படி 141 வது இடத்தில் இருந்த இலங்கை பத்து இடங்கள் முன்னேறி 131 வது இடத்திற்கு சென்றுள்ளது.

2- 400 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள 400 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும் நிகழ்வு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த 03 ஆண்டுகளில் வெளிநாடுகளில் உள்ள சுமார் 32,000 இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமையை பெற்றுக் கொண்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் கூறினார்.

3- 25-05-2018 முதல் புதிய பஸ்கட்டண அதிகரிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. நூற்றுக்கு 12.5 சதவீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.இதனடிப்படையில் புதிய திருத்தங்களுக்கு அமைய குறைந்தபட்ச கட்டணமாக 12 ரூபாவாகவும் நியமிக்கப்பட்டுள்ளது.இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை பஸ்களினதும், தனியார் பஸ்களினதும் கட்டண விபரங்கள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழ புதிய விலைப்பட்டியலை வெளியிட்டுள்ளது

4- சீரற்ற வானிலை காரணமாக 19 மாவட்டங்களை சேர்ந்த ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 954 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனை தெரிவித்துள்ளது. மழையுடன் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக 13 பேர் மரணித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

5- இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக அவுஸ்திரேலிய மேலும் 7 லட்சம் அவுஸ்திரேலிய டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்கவுள்ளது. இந்த நிதி, மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.இதன் ஊடாக யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்கள், தங்களது சொந்த இடங்களில் குடியேற வாய்ப்புகிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தப் பின்னரான காலப்பகுதியில் இதுவரையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் 2 பில்லியன் ரூபாய் வரையில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளுக்காக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

6- இலங்கையில் இந்த வருடத்தில் மாத்திரம் 100 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கைக்கு கடத்தப்பட்ட தங்கத்தின் அளவு இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டிற்கு கடத்தப்படவிருந்த தங்கம் இந்த வருடம் 37 சந்தர்ப்பங்களில் சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 10-06-2018வரை சுங்க அதிகாரிகளால் 42 கிலோ 200 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

7- யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்டு 37 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு யாழ்ப்பாண பொதுநூலகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.நூலகப் பணியாளர்களால் நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாநாகர சபை முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதனை அடுத்து அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நூலகத்துக்கு வெளியில் நினைவேந்தல் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

8- நாடு முழுவதும் வறுமை கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கு அரசாங்கம் சமுர்த்திகொடுப்பனவு வழங்கிவருகிறது. அதனடிப்படையில் இதுவரை 1.38 மில்லியன் குடும்பங்களைச் சேர்ந்தோர் சமுர்த்தி நிவாரண உதவிகளை பெற்றுவருகின்றனர். தற்போது நாடுமுழுவதும் மேலும் 150000 குடும்பங்கள் வறுமைகோட்டின் வாழ்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்

# விமான நிலையங்களும் அவற்றின் தரவரிசைகளும்.....

உலகின் தலைசிறந்த விமான நிலையங்கள் எவை என்று தெரியுமா? 2018-ம் ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த 10 விமான நிலையங்களின் பட்டியலை ஸ்கைடட்ராக்ஸ் (Skytrax) என்னும் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியல் இதுதான். முதல் இடத்தை பிடித்தது சிங்கப்பூர் ஷங்கி விமான நிலையம்.

| | |
|---|---|
| 1 சாங்கி விமான நிலையம் - சிங்கப்பூர் | 2 இன்ஷியான் - சியோல் |
| 3 ஹனெடா - டோக்கியோ | 4 ஹாங்காங் |
| 5 தோஹா ஹமாத் | 6 மியூனிச் |
| 7 சென்ட்ரைர் நேகோயா | 8 லண்டன் ஹீத்ரோ |
| 9 ஜூரிச் | 10 பிராங்போர்ட் |

உலகின் சுத்தமான 10 விமான நிலையங்களையும் பட்டியல் இட்டுள்ளது ஸ்கைட்ராக்ஸ் நிறுவனம்

| | |
|---|---|
| 1 டோக்கியோ ஹனெடா | 2 சென்ட்ரைர் நேகோயா |
| 3 இன்சோன் | 4. தைவான் தாவோயுவான் |
| 5 சிங்கப்பூர் சாங்கி | 6 டோக்கியோ நரிடா |
| 7 ஹாங்காங் | 8 ஜூரிச் |
| 9 டோஹா ஹமாத் | 10 ஹெல்சின்க்கி |

அண்மையில் மேம்படுத்த சிறந்த விமான நிலையங்கள் இவைதான்

| | |
|---|---|
| 1 ரோம் ஃப்யூமிசினோ (Fiumicino) | 2 பெர்த் |
| 3 கால்கரி | 4. தைவான் தாவோயுவான் |
| 5 ஏதென்ஸ் | 6 நாடி |
| 7 மாண்ட்ரீல் | 8 மாஸ்கோ ஷெர்மெமிட்டோ |
| 9 ஹௌஸ்டன் இண்டர்காண்டினென்டல் | 10 மணிலா |

இந்தப் பட்டியலை எல்லாம் பார்க்கும் போது இந்தியாவில் ஏதேனும் ஒரு விமான நிலையம் இடம்பெற்றிருக்கலாம் என்று தவிர்க்க முடியாமல் தோன்றுகிறது. ஆறுதல் அளிக்கக் கூடிய ஒரு செய்தியாக 2017-ம் ஆண்டு எடுக்கப்பட்ட சர்வேயில், உலகின் தலைசிறந்த 100 விமான நிலையங்களில் 60 இடத்தில் புது தில்லியும், 64-வது இடத்தில் மும்பாய் விமான நிலையும் இடம்பிடித்துள்ளது. மேலும் 10 தலைசிறந்த விமான டெர்மினல்களின் பட்டியலில் முதல் இடத்தில் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தின் இரண்டாம் டெர்மினல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2018

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு : ரூபா 5000/=
இரண்டாம் பரிசு: ரூபா 3000/=
மூன்றாம் பரிசு: ரூபா 2000/=
ஏனைய ஏழ சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான விதிகள்....
சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல்வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி: ஞானம் அலுவலகம் -

3டீ, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

போட்டி முடிவுத் திகதி : 30.09.2018 முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது.

ஆசிரியர்

---

## தகவல்:-

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முதன் முதல் பண்டிதர் பட்டம் பெற்ற இலங்கைத் தமிழர்கள்..

1வது-மயில்வாகனன் (விபுலானந்த அடிகள்) மட்டக்களப்பு
2வது-பாலாம்பிகை (புலோலியூர் குமாரசாமிப் புலவரின் பேத்தி) புலோலி
3வது-பத்மாசனி (புலோலியூர் குமாரசாமிப் புலவரின் பேத்தி) புலோலி
4வது-டேவிட் இராசையா வவுனியா
5வது-சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை(பண்டிதர் கணபதிப்பிள்ளை) மட்டுவில்.

# கணினிக் கல்வி இதழ் நடாத்தும் கணினித் தொழில்நுட்பக் கண்காட்சியும் கணினிப் பயிற்சிப் பட்டறையும்!

காலம் - 16.09.2018 ஞாயிறு நேரம் - காலை 10:00 - 20:00
இடம் - Saalbau Volkshaus Sossenheim
Siegener Straße 22
65936 Frankfurt am Main

ஐரோப்பியக் கணினிக் கல்வி நிலையமும் கணினிக் கல்வி இதழும் இணைந்த நடாத்தும் மாபொரும் கணினித் தொழில்நுட்பக் கண்காட்சி. இந்தக் கண்காட்சியில் 100 மேற்பட்ட கணினித் தொழில்நுட்பம் பற்றியதான விளக்கங்களும் அறிவுரைகளும் விபரிக்கப்படுகின்றது. இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் பின்வரும் படிவத்தினை நிரம்பி 30.07.2018 க்கு முன்பாக அனுப்பி வைக்கவும். அனுமதி பெற்றவர்கள் கண்காட்சி தொடங்கும் அரை மணி நேரத்துக்கு முன்பாக சமூகமளிக்க வேண்டும்.

1) Name ______________________________
2) Email. ______________________________
3) Time 1) 10:00 - 13: 00 ____________________
2) 13:30 - 16:30 ____________________
3) 17:00 - 20:00 ____________________
4) PC/Laptop/Tab/Handy ________ மென்பொருள் பதிய / அல்லது திருத்தக்கொண்டுவருகின்றேன். / அல்லது விளக்கம் அறியக் கொண்டு வருகின்றேன்.கண்காட்சி ஒரே நாளில் 3 தடவைகளாக விளக்கங்களும் வகுப்புக்களும் நடாத்தப்படும் எனவே உங்கள் நேரத்தைத் தெரிவு செய்து விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பி அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்.

அனுமதி இலவசம்!!!

கணினித் தொழில்நுட்ப வல்லுனர் கணினி தொழில்நுட்பவியலாளர் கணினி ஆசிரியர்
சி சற்குணநாதன் திரு சுதர்சன் தி. லம்பேட்
கணினி விஞ்ஞானி திரு கனீந்திரன் இவர்களுடன் இன்னும் பல கணினி தொழில்நுட்ப வல்லுனர்கள் கலந்து கொள்கின்றார்கள்.
தொடர்புகளுக்கு : T.A. Lambert Email – alxlambrtt@ aol.com






யாழ் - சுழிபுரத்தில் பச்சிளம் பாலகியின் படுகொலை
இறுதி அஞ்சலியும் கண்டனப் பேரணிகளும்
25.06.2018



Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 190



## ஏ. பி. ஜே. அப்துல் கலாம்
## 15.10.1931 - 27.07.2015

இந்திய குடியரசுத்தலைவர்
25.07.2002 - 25.07.2007

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€